பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com

செப்டம்பர் 2019



## தப்பெல்லாம் தப்பேயில்லை

திரைப்படப் பாடலாசிரியர்
கவிஞர் அஸ்மின் நேர்காணல்

நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும் ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

பல்சுவை
# தமிழ்நெஞ்சம் ®

தோற்றம் 1972 செப்டம்பர் 2019

*ஆசிரியர் / வெளியிடுபவர் :*
**அமின் மொஹமெட்**
*இணையாசிரியர் :*
**முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி**
*நிர்வாக ஆசிரியர் :*
**சஃபி மொஹமெட்**
*ஆசிரியர் குழு :*
**ஹிப்ஸீர் ரஹ்மான்**
**நெல்லை உலகம்மாள்**
**கவிஞர் தென்றல் கவி**
**கவிஞர் அ.முத்துசாமி**
**கவிஞர் ஈழபாரதி**
**கவிஞர் பாலமுனை பாறூக்**
*ஆலோசகர்கள் :*
**பாட்டரசர் கி. பாரதிதாசன்**
**கவிதாயினி சக்தி ஜோதி**

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் விமர்சனம், அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப அஞ்சல் தொடர்புகளுக்கு ...

TAMILNENJAM
59, rue des Entrechats, 95800 Cergy - France.

web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. நூல் விமர்சனம் செய்திட, நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பு. செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.




கவிஞர் ஜோதிபாஸ் முனியப்பன் எழுதிய மரபுக்கதம்பம் கடந்த 11 ஆகஸ்ட் 2019 ல் அதி விமரிசையாக தமிழகத்தில் தஞ்சைத் தமிழ் மன்றம் வலங்கைமானில் நடத்திய தஞ்சைத் தமிழ் மன்றம் முதலாமாண்டு விழாவில் வெளியீடு செய்தது.

நூல் தேவைக்கு தொடர்புகொள்ளவும்.



# ஒழுக்கம்

இயந்திர மாய்மாறி விட்ட உலகினில்
இன்றைய குமுகாய மிழந்த தெத்தனை
இயற்கையின் வளங்களையும் ஒழுக்க மென்றிடு(ம்)
இன்னுயிர் வரத்தினையும் நேர்மைத் திறனையும்!
உயரிய குமுகாய வளர்ச்சி யென்பது
உன்னத ஒழுக்கம்தா னென்று ணர்த்துவோம்!
செயலிலு மொழுக்கத்தைக் காட்டும் மானிடர்
செம்மையாய் வாழ்ந்திடுவர் வழிகாட் டி டுவரே!

எத்துறை கண்டிடினும் கையூட் டரசியல்
எங்கணும் நாள்தோறும் வன்முறைப் பாலியல்
இத்தரை மாந்தரெலா மின்று துன்புறும்
இழிநிலை வந்ததுவே யிழந்த பண்பினால்!
முத்தமி ழிலக்கியங்கள் முன்னி றுத்திய
முதுமொழி பின்பற்றும் முறைதா னொழுக்கமாம்!
தத்துவம் பேசுவதால் பயனொன் றுமில்லையே!
தன்னொழுக் கம்பேணினால் தலைகு னிவில்லையே!

பயிரினை வேலியது மேய்ந்தாற் போலவே
பண்பிலா மாந்தர்கள் உறவுப் போர்வையில்!
உயிரினைக் காத்திடுவோ(ம்) ஒழுக்க மேன்மையால்!
உரக்கவே யுரைத்திடுவோம் நீதிக் கல்வியால்!
துயிலுமிக் குமுகாயம் விழிக்க வேண்டுமே
துரத்திடும் கேட்டினைத்தான் கரத்தி லடக்கிட!
பயிலுவோம் நல்லொழுக்கம் பண்பு மேவிட
பாரினி லுயர்ந்திடவே தேவையே ஒழுக்கமே!

உயிரினும் மேலான ஒழுக்க மென்பது
உண்மையில் தொலைந்துபோய்விட் டதன்றோ யிதனையு(ம்)
உயிர்க்கொலை யென்றேநாம் உரைக்க வேண்டுமே!
உறவுகள் திரிந்தனவே யொழுக்கக் கேட்டினில்!
நயந்தரும் செல்வமெலாம் நாச மாகிடும்!
நல்லொழுக் கமில்லையென்றால் நாடும் கெட்டிடும்!
பயன்தரு மறிவுரையைக் கேட்டு நடந்திடில்
பண்பது வளர்ந்திடுமே பாரில் வென்றிட!

**மு .மணிமேகலை**
ஓசூர்



# நிற்கும் நிர்வாணப் பெண்

— கரோல் ஆன் டஃபி

— தமிழில் செந்தில் நாதன்

அற்ப ஃபிராங்க்குகளுக்காக ஆறு மணி நேரம் இது போல.
வயிறு மார்க்காம்பு புட்டம் சன்னல் வெளிச்சத்தில்,
என் வண்ணங்களை உறிஞ்சுகிறான் இவன். சற்றே வலப்பக்கம்,
பெண்ணே. அசையாமலிருக்க முயற்சி செய்.
நான் பகுப்புமுறை ஓவிய மாதிரியாய்ப் புகழ் பெற்ற
அருங்காட்சியகங்களில் தொங்கவிடப்படுவேன்.
இப்படியொரு நதியோரத் தாசி
ஓவியமா என்று நடுத்தர வர்க்கம் பாராட்டும்.
இதைக் கலை என்கிறார்கள்.

ஒருவேளை இதுதானோ.
இவன் கனபரிமாணங்களைப் பற்றிச் சிந்திக்கிறான்.
நான் அடுத்தவேளை உணவைப் பற்றி. நீ இளைத்துக் கொண்டே போகிறாய்
பெண்ணே, இது நல்லதில்லை. என் மார்புகள் சற்றே கீழ்நோக்கித்
தொங்குகின்றன, ஓவியக்கூடம் குளிர்கிறது. இங்கிலாந்து மகாராணி
என் உருவத்தைப் பார்வையிடுவதைத் தேநீர் இலைகளில்
ஆரூடம் காண்கிறேன். அற்புதம், அவள் முணுமுணுக்கிறாள்,
நகர்ந்தபடியே. இது எனக்குச் சிரிப்பூட்டுகிறது. இவன் பெயர்
ஜார்ஜெ. இவன் ஒரு மேதை என்கிறார்கள்.
ஒவ்வொரு நேரம் காரியத்தைக் கவனிக்காமல்
என் கதகதப்புக்காக விரைத்து ஏங்குகிறான்.

வண்ணங்களில் தூரிகையை தோய்த்துத் தோய்த்துச்
சட்டகத்துக்குள் என்னைச் சிறை பிடிக்கிறான். சின்னப் பையா,
நான் விற்பதை உன்னால் வாங்க இயலாது.
நாம் இருவரும் ஏழைகள், அவரவர் வழியில் பிழைக்கிறோம்.
ஏன் இதைச் செய்கிறாய் என்று அவனைக் கேட்கிறேன்.
ஏனென்றால் நான் செய்தாக வேண்டும். வேறு வழியில்லை.
பேசாதே. என் சிரிப்பு அவனைக் குழப்புகிறது.
இந்தக் கலைஞர்கள் தங்களைத் தீவிரமாகப் பாவித்துக் கொள்கிறார்கள்.
நான் இரவில் மதுவருந்திவிட்டு மதுக்கூடங்களில் நடனமாடுவேன்.
ஓவியம் முடிந்தபிறகு பெருமையுடன் என்னிடம் காட்டுகிறான்,
ஒரு சிகரெட்டைப் பற்றவைத்தபடி. நான் சொல்கிறேன்-
பன்னிரெண்டு ஃபிராங்க், அப்படியே என் மேலாடையை எடு.
இது என்னைப் போல் இல்லை.

# "தப்பெல்லாம் தப்பேயில்லை"

## கவிஞர் அஸ்மின்

தமிழ் திரைப்பட பாடலாசிரியர்.
இலங்கை வசந்தம் தொலைக்காட்சி நிகழ்ச்சி தயாரிப்பாளர், நிகழ்ச்சி தொகுப்பாளர்.



### நேர்காணல் : மாலதி சந்திரசேகரன்

மூன்று கவிதை நூல்களின் ஆசிரியர். விஜய் ஆண்டனி நடிப்பில் வெளியான நான் படத்தில் "தப்பெல்லாம் தப்பேயில்லை" பாடலின் ஊடாக தமிழ் சினிமாவில் கால் பதித்தவர். அமரகாவியம் திரைப்படத்தில் எழுதிய பாடலுக்காக சிறந்த பாடலாசிரியருக்கான "எடிசன்" விருது பெற்றவர். இவர் மறைந்த தமிழக முதல்வர் ஜெயா அம்மா அவர்களின் மறைவின் போது வெளியான முதல் இரங்கல் பாடல் "வானே இடிந்ததம்மா" பாடலை எழுதியவர்.

இலங்கையில் தொலைக்காட்சி துறையில் 3 தேசிய விருதுகளையும், கவிதை துறையில் இலங்கையில் பல தேசிய மட்ட விருதுகளையும் பெற்றவர். கலை, இலக்கிய பங்களிப்புக்காக இலங்கை ஜனாதிபதியினால் கௌரவிக்கப்பட்டவர். இலங்கை எம் தாய் நாடு, இந்தியா எம் தந்தை நாடு எனச்சொல்லும் இவர் தமிழ்நெஞ்சம் இதழுக்காக கொடுத்த பிரத்யோக பேட்டியைக் காண்போம்.



- இலங்கையில் இருந்து கொண்டு இந்திய தமிழர்களின் ரசனையை உள்வாங்கி தங்களால் எப்படி பாடல்களை எழுத முடிகிறது?

''செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே" என்கின்றான் பாரதி.

ஆம்! இலங்கை எம் தாய்நாடு இந்தியா எம் தந்தை நாடு. இருநாடுகளுக்குள் இருக்கலாம்

எல்லைக்கோடு ஆனால் எமக்குள் இல்லை துளியும் வேறுபாடு. நாம் அனைவரும் தமிழ்தாய் பெற்ற பிள்ளைகள்.வெவ்வேறு பாத்திரங்களில் இருக்கின்ற ஒரே சுவையுள்ள பானம் நாங்கள். எமக்கு அடித்தால் உங்களுக்கு வலிக்கிறதே அது எப்படி? நாம் அழுதால் நீங்கள் துடிக்கின்றீர்களே அது எப்படி சாத்தியமானது. ஈழத்தமிழர்களுக்காக தன்னுயிர் நீத்த மாவீரர் முத்துக்குமார் தோழர் செங்கொடி எதனால் அப்படி செய்தார்கள்? தொப்புள் கொடி உறவின் மீதான பாசம் என்பது அதுதான். இலங்கையில் இருக்கின்ற படைப்பாளிகளுக்கு முன்னோடிகளாக இருந்தவர்கள் தமிழகத்தில் இருக்கின்றவர்கள்தான். இங்கு இருந்து வெளிவருகின்ற நூல்கள் சஞ்சிகைகளை நாம் வாசிக்கின்றோம். தமிழ் திரைப்படங்களை ரசிக்கின்றோம். தமிழ் பாடல்களை கேட்கின்றோம். உணர்வுபூர்வமாக தமிழகத்தோடு நாம் எப்போதும் ஒன்றித்தே இருக்கின்றோம்.

பாடலாசிரியர் அஸ்மின் விருதுபெறும் தருணம்



உங்களுக்கும் இசைஞானி பிடித்திருக்கிறது. 'ஆஸ்கார்' நாயகன் பிடித்திருக்கிறது. அதுபோல் எங்களுக்கும் அவர்களை பிடிக்கும். எங்களுக்கும் 'சூப்பர் ஸ்டார்' ரஜினிகாந்தான். எம்.ஜி.ஆர் ரசிகர் மன்றம் இலங்கையிலும் இருக்கிறது. உலக நாயகன் கமல் நடிப்பை நாமும் ரசிக்கிறோம் தலையையும் தளபதியையும் நாமும் தலையில் வைத்துக் கொண்டாடுகிறோம். தமிழன் என்ற திமிர் உங்களுக்கு இருப்பதுபோல் எங்களுக்கும் இருக்கிறது. இப்படி எத்தனையோ விடயங்களில் நாம் ஒரே பாதையில் பயணிக்கின்றோம். இலங்கை தமிழர்கள் தமிழ் நாட்டிலிருந்து தமிழ்பாடல்களையும் கவிதைகளையும் இதுகால வரை இறக்குமதி செய்து வந்தார்கள். நான் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்ய முனைந்திருக்கின்றேன். தமிழை தாய் மொழியாக கொள்ளாத 'கொன்ஸ்டைன் ஜோசப் பெசக்கி' என்ற இத்தாலியர் தமிழ் உரை நடையின் தந்தையாக போற்றப்படுகின்றார் அவர்தான் 'தேம்பாவணி' என்ற காப்பியம் தந்த புலவர் வீரமா முனிவர். வெள்ளைக்காரனே தமிழகம் வந்து தமிழுக்கு வெள்ளையடிக்கும்போது இலங்கை தமிழன் இந்திய தமிழர்களின் உணர்வுகளை எழுதுவதில் ஆச்சரியம் ஏதுமில்லை.

- கவி.கா.மு.ஷெரீப், ரோஷனா பேகம், மு.மேத்தா ஆகியோரை தொடர்ந்து தற்போது நீங்கள்.. தமிழக திரைப்பட உலகில்இஸ்லாமிய பாடலாசிரியர்களின் பங்களிப்பு குறைவாகவே உள்ளதே.

தமிழ்சினிமாவில்பாடல்எழுதுவதென்பது இலகுவான விடயமல்ல. ஒரு காலத்தில் முகவரி இல்லாமல் அலைந்தவர்கள் தமிழ் சினிமாவுக்கே முகவரிகளாக மாறியிருக்கின்றார்கள். தட்டாமல் கதவு கூட திறக்காது இங்கே போராடாமல் எதுவுமே கிடைக்காது.கிடைத்தாலும் நிலைக்காது.

முஸ்லிம் கவிஞர்கள் பாடல் எழுதுவதற்கு முயற்சிக்காது இருந்திருக்கலாம். வந்தாரை வரவேற்று வாழ்வைக்காட்டி

வளர்ந்தோங்கி அவர் நிற்க வழியை காட்டும் பண்புள்ள மக்கள் உள்ள நாடு தமிழ்நாடு. இங்கே எவராக இருந்தாலும் திறமையும் முயற்சியும் இருந்தால் தமிழ் சினிமாதூக்கியெறியாது.என்றோ ஒருநாள் தோளில் தூக்கி வைத்துக்கொண்டாடும்.

- பிறமொழி வார்த்தையை கலக்காமல் தமிழில் மட்டும் பாடல் எழுதும் கொள் கையை வைத்துள்ளீர்களா?

உலக மொழிகளின் 'ஏவாள்' தமிழ்தான். நாம் பேசும் தமிழில் பன்னாட்டு மொழிகள் கலந்து இருக்கின்றன. அதுபோல் நம் மொழியும் பல மொழிகளில் மலர்ந்து மணக் கிறது. நான் குமளி பழம் சாப்பிட்டேன் என்றால் இன்று பலருக்கும் புரியாது. ஆப்பிள் பழம் என்றால் அனைவரும் இலகுவில் புரிந்து கொள்வர். சீமெந்து என்றால் பைஞ்சுதை என்று இங்கு எத்தனை பேருக்கு தெரியும்? மேசை என்ற போர்த்துக்கேய சொல்லைத்தான் நாம் தத்தெடுத்து தமிழாக நினைத்து பயன்படுத்துகின்றோம். தமிழ் நாட்டு பத்திரிகை, தொலைக்காட்சி ஊடகங் களில் ஆங்கில வார்த்தைகள் தமிழுக்கு நிகராக பயன்படுத்துவதை நான் பார்த்திருக்கிறேன். இங்கு பலருக்கு ஆங்கிலம் தெரிந்தளவுக்கு தமிழ் தெரியாது என்பது உறைக்கும் உண்மை. இத்தகைய சூழலில் தூய தமிழில் மட்டும்தான் பாடல் எழுதுவேன் என்று கூறுவது ஏமாற்று வேலை. உடை தைக்கும் தையல்காரரிடம் யாராவது தனக்கு பிடிக்காத நிறத்தில துணியை கொடுத்தாலும் தைத்துக் கொடுத்தே ஆகவேண்டும். எனக்கு இந்த நிறம் பிடிக்கவில்லை என்னால் இதனை தைக்க முடியாது என்று சொன்னால் வந்தவர் வேறு தையல்காரரை நாடுவார். அந்த தையல்காரர் நிலைதான் பாடலாசிரியனுக்கும். இங்கு எங்கள் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு இடமில்லை.

கதைச் சூழலுக்கு என்ன தேவையோ இயக்குனர் இசையமைப்பாளர் எதை விரும்புகிறாரோ அதைதான் நாங்கள் செய்ய வேண்டும். தமிழ் சினிமாவில் நான் இப்படிதான் பாடல் எழுதுவேன் என்று முரண்டு பிடிக்க முடியாது.



கவிஞர் பாடலாசிரியர் அஸ்மினுடன் மனைவி ரிப்கா பேகம்

எப்படி நான் எழுத வேண்டும் என்று கேட்க வேண்டும். நான் ஆங்கில வார்த்தை கலந்து எழுத மாட்டேன் தூய தமிழில்தான் எழுதுவேன் என்று சொல்லிக் கொண்டிருந்தால் அந்த வாய்ப்புக்காக பலர் வரிசையில்காத்திருக்கின்றார்கள்.தூயதமிழில் பாடல் வரவேண்டும் என்று எதிர்பார்க்கும் நாம் நமது அன்றாட வாழ்வில் தமிழுக்கு கொடுக்கும் இடந்தான் என்ன? ஆங்கிலத்தில் பேசுவதை கௌரவமாய் நினைக்கும் நாம் குறைந்த பட்சம் தமிழர்களுடனாவது தமிழில் பேசுகின்றோமா?

'குட்நைட்'டில் தூங்கச் செல்லும் எங்கள் இரவு 'குட்மோர்னிங்கில்'தானே மீண்டும் எழும்புகிறது..

 இலங்கையில் இருக்கும் நீங்கள் பாடல் வாய்ப்புகளை எப்படி பெறுகின்றீர்கள். சிட்சுவேசன் மெட்டுக்களை எப்படி தெரிந்து கொள்கிறீர்கள்.

இசையமைப்பாளர் நடிகர் விஜய் ஆண்டனி அவர்களின் 'நான்' திரைப்படத்தில் இடம்பெற்ற 'தப்பெல்லாம் தப்பேயில்லை' என்ற பாடலினூடாகத்தான் நான் தமிழ் சினிமாவில் நான் அறிமுகமானேன். அதன் பின்னர் சுமார் 15 திரைப்படங்களில் நான் பணிபுரிந்துள்ளேன். அமரகாவியம், சும்மாவேஆடுவோம்,எந்தநேரத்திலும்ஆகிய படங்கள் இதுவரை வெளியாகியுள்ளன. இயக்குனர் ஜீவாசங்கரின் அமரகாவியம் படத்தில் ஜிப்ரானின் இசையில் பத்மலதா பாடிய 'தாகம் தீர கானல் நீரை காதல் இன்று காட்டுதே' பாடலுக்கு சிறந்த வெளிநாட்டு பாடலாசிரியருக்கான 'எடிசன்' விருது எனக்கு கிடைத்தது. எந்த நேரத்திலும் படத்தின இயக்குனரையோ,இசையமைப்பாளரையோ நேரடியாக சந்திக்காமலே இப் படத்தின் பாடல்கள் என்னால் எழுதப்பட்டன. கடல் கடந்து இருந்தாலும் தேவையேற்பட்டால் அவ்வப்போது சென்னைக்கு வந்து போகின்றேன். 2019 ஆண்டில் நான் பணிபுரிந்த பல படங்கள் வெளிவர இருக்கின்றன.புதியபடங்களுக்கும்ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளேன். தூரத்தில் இருப்பதால் பல நல்ல வாய்ப்புகளும் கடைசி நேரத்தில் கைநழுவிப் போயிருக்கின்றன. தேடி வரும் வாய்ப்புகளை பயன்படுத்துகின்றேன். வாட்சப் தொழில் நுட்பம் என் பாடல் பணியை இலகுவாக்கிறது.

வாட்சப்பில் டியுன் கேட்டு
வாட்சப்பில் கதை கேட்டு
வாட்சப்பில் பாட்டெழுதி
வாட்சப்பில் அதை திருத்தும்
வாண்மை மிகு பாவலன் நான்
வாழ்க்கையிலே கண்டவற்றை
வார்த்தைகளில் கொண்டு வந்து
வானளந்த தேன் கவியால்
வரலாற்றில் பெயர் பதிப்பேன்.
வருங்காலம் என் காலம்
வலியாவும் ஒளியாகும்
வழியற்று அலைவோர்க்கும்
வழியென்றன் வழியாகும்.

கவிஞர் அஸ்மின் எழுதி பகழ்பெற்ற கவிதை நூல்




 ஜெயலலிதா மறைவுக்கு எழுதிய ஒரு இரங்கற்பாடல் இவ்வளவு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்று நினைத்தீர்களா? அந்த பாடலை உடனே எழுதத் தூண்டியது எது?

இலங்கை முஸ்லிம்களின் தலைவர் அஷ்ரப் அவர்களின் மறைவின் போது நான் எழுதிய இரங்கல் கவிதைக்கு ஒரு போட்டியில் அகில இலங்கை மட்டத்தில் முதலாமிடம் கிடைத்தமையினால் 2001 ஆம் ஆண்டு அப்போதைய இலங்கை ஜனாதிபதி சந்திரிகாவின் கைகளால் விருதுபெற்றேன். அதுதான் நான் தேசிய மட்டத்தில் பெற்ற முதல் விருது. அதன் பின்னர் இலங்கையில் மட்டுமல்லாது உலகளவில் நடக்கும் முக்கிய நிகழ்வுகள், சம்பவங்கள் எனை பாதித்தால் அதனை கவிதையாக எழுதிவிடுவேன். 2004

ஆண்டு சுனாமியின் போது நான் எழுதிய 'உலக கோப்பை வென்ற சுனாமி' கவிதை இலங்கை ஊடகங்களில் வெளிவந்து அதிர்வை ஏற்படுத்தியது.

சென்னை வெள்ளத்தின் போது 'கொல்லென கொல்லும் மழை' என்ற கவிதை எழுதினேன். அந்த வகையில் 'அம்மாவுக்கு' முகநூலில் நான் எழுதிய கவிதைதான் ரசிகர்களின் வரவேற்பை தொடர்ந்து பாடலாக உருவானது. அந்தப் பாடலை இசையமைத்து பாடியவர் சதீஸ் வர்சன். அந்தப் பாடலை அதிகாலை வேலையில் முதல் முதலாக நான் கேட்டபோது என்னை அறியாமேல ஏங்கி எங்கி அழுதேன். அந்தளவுக்கு பாடல் உருக்கமாக இருந்தது. கண்டிப்பாக இந்தப்பாடலை தமிழக மக்கள் கேட்டால் மிகப்பெரும் அதிர்வை ஏற்படுத்தும் என்று நான் நம்பினேன் அது நிகழ்ந்ததது.பாடலைக் கேட்டு அம்மாவின் அரசியல் எதிரிகளும் கண்ணீர் சிந்தியதாக ஊடகங்கள் எழுதின. அம்மாவின் சமாதியில் 2 மாதங்கள் 24 மணிநேரம் எமது பாடல் ஒலித்தது. போயஸ்கார்டனுக்கு எம்மை வரவழைத்த அம்மாவின் தோழி சசிகலா அந்த பாடலுக்காக எம்மை பாராட்டினார். இரண்டு ஆண்டுகள் கழிந்தாலும் அம்மாவின் சமாதியில் 'வானே இடிந்ததம்மா' பாடல் மீண்டும் ஒலித்தது. இன்னும் பல ஆண்டுகள் சென்றாலும் அப்பாடல் ஒலிக்கும். அது நாம் பெற்ற பாக்கியமே.

- இலங்கையில் ஈழ இலக்கியம் தேசிய இலக்கியம் என்று இரண்டாக பிரிந்து கிடக்கிறது தாங்கள் எதை சேர்ந்தவர்.?

இரண்டல்ல இன்னும் பல பிரிவுகள் இருக்கின்றன. நான் சுதந்திரமானவன் காற்றைப் போன்றவன் எந்த வட்டத்துக் குள்ளும் என்னை சுருக்கிக்கொள்ள நான் விரும்புவ தில்லை ஆனால் இலங்கையில் உள்ள அத்தனை பிரிவுகளோடும் ஒரு படைப்பாளியாய் நட்பு பாராட்டுகின்றேன்.

அடிப்படையில் நான் ஒரு மரபுக்கவிஞன். புதுக்கவிதைகளும் எழுதியுள்ளேன். நவீன கவிதைகளையும் வாசிப்பேன். ஆனால் தனித்துவமாகத்தான் யோசிப்பேன்.

இதுவரை 'விடை தேடும் வினாக்கள்', 'விடியலின் ராகங்கள்', 'பாம்புகள் குளிக்கும்

அஸ்மின் எழுதிய தூக்குத் தொற வர்ராரு... பாடலுக்கு அஜித் குமார் .
படம் : விஸ்வாசம்



நதி' என மூன்று கவிதை நூல்கள் வெளி வந்துள்ளன. 2019 இல் 'தட்டாதே திறந்து கிடக்கிறது'

கவிதைநூல்.'பாடல்பட்டபாடு'பத்திஎழுத்து நூல் வெளிவர இருக்கின்றன. இன்றைய இளைய தலைமுறையினர் மரபுக் கவிதை எழுதுவது அரிதாக இருக்கிறது. நான் யாப்பியல் கவிதைகளில் வாழ்வியல் வார்த்தைகளை கலந்து எழுதுகின்றேன். எனது யாப்பிலக்கண அறிவு மெட்டுக்கு பாடல் எழுதுவதற்கு உதவுகின்றது. போர்க்காலத்தில் ஈழம் சார்ந்த கவிதைகளை ஈழநிலா என்ற பெயரில் எழுதியுள்ளேன். பிரிவுகளில் சிக்கிக்கொண்டு படைப்பாளிகளுள் நான் பெரியவன் நீ சிறியவன் என்று காகிதப் போர் செய்துகொண்டு இலக்கியவாதிகளின் இலக்கியவாதி என்று தம்பட்ட மடித்துக்கொண்டு இருப்பதில் எனக்கு உடன்பாடில்லை..மக்களுக்கு புரிகின்ற படைப்புகளை தருகின்ற எம்மண்ணையும் மக்களையும் பாடுகின்ற மக்கள் கவிஞனாய் இருப்பதனையே உயர்வாக கருதுகிறேன்.

- உங்கள் வட்டாரத்தை சேர்ந்த பாலு மகேந்திரா பற்றி எப்போது அறிந்தீர்கள். அவருடைய திரையுலக செயற்பாடு பற்றி தங்கள் கருத்து?

மகாகவி பாரதியின் மேன்மையை முதன் முதலாக வெளியுலகுக்கு வெளிக் கொணர்ந்த சுவாமி விபுலானந்தர் பிறந்த மண் மட்டக்களப்பு.அந்த மண்தான் பாலுமகேந்திரா என்ற கமெரா கவிஞனையும் ஈன்றெடுத்தது. தமிழ்சினிமாவுக்குதேசிய அங்கீகாரம் பெற்றுக் கொடுத்த தமிழன் எம்மண்ணவர் என்பதில் எமக்கும் பெருமை. அவர் தன் வாழ்வினை சினிமாவுக்கு அர்ப்பணித்தவர். நாம் இன்று வியந்து பார்க்கும் பல விருட்ஷங்கள் அவர் போட்ட விதைகள்தான். தமிழ் சினிமாவுக்கு ஒளிபாய்ச்சியவர்கள் வரிசையில் எங்கள் ஒளி ஓவியருக்கும் நிரந்தர இடமுண்டு.

- கவிஞர் திரைப்பட பாடலாசிரியர் தவிர்த்து வேறு என்ன மாதிரியான கலை வடிவங்களில் விருப்பம்.

ஆரம்பத்தில் பத்திரிகைதுறையில் பணி யாற்றிய நான் அதன் பின்னர் தொலைக்காட்சி துறையில் இணைந்து பத்தாண்டுகாலமாக பணிபுரிந்து வருகின்றேன்.

இலங்கை வசந்தம் தொலைக்காட்சியில் நான் இயக்கிய 'தூவானம்' என்ற கலை, இலக்கிய சஞ்சிகை நிகழ்ச்சி மூன்று முறை இலங்கைஅரசினால்சிறந்ததொலைக்காட்சி சஞ்சிகை நிகழ்ச்சிக்கான தேசிய விருதினை பெற்றுள்ளது. சிறுகதைகளும் எழுதியுள்ளேன். நான் பிறந்த மண்ணின் வாழ்வியலை நாவலாய் எழுதவேண்டும் என்ற எண்ணமும் உள்ளது. நபி முஹம்மது (ஸல்) அவர்களின் வாழ்க்கை பற்றி காவியம் ஒன்று எழுத வேண்டும் என்ற கனவும் உள்ளது. வானொலிகளுக்கு நிலைய குறியீட்டு இசை மற்றும் விளம்பரங்களும் எழுதியுள்ளேன்.

வாய்ப்பு கிடைத்தால் தமிழ் சினிமாவுக்கு என்னால் வசனம் எழுத முடியும் என்ற நம்பிக்கையுண்டு. தமிழில் எந்த கலைப்படைப்பையும் என்னால் படைக்க முடியும். ஒரு போதும் முடியாது என்று நான் கருதியதில்லை காரணம் என்னிடம் 'தமிழ்' இருக்கிறது.

- தமிழ் உலகில் உங்களுக்க பிடித்த கவிஞர் யார்? இலக்கியவாதிகள் யார்?

பிடித்த கவிஞர் இருந்தால் பிடிக்காத கவிஞர்களும் இருக்கலாம் அல்லவா. எனக்கு அப்படி இல்லை. நான் நல்ல கவிதைகளை தருகின்ற என் சம காலத்து கவிஞனுக்கும் ரசிகன்தான். தமிழ் தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் பல நல்ல கவிஞர்கள் இருக்கின்றார்கள். அவர்களை படிக்கின்றேன் பட்டியலிட விருப்பமில்லை. கவிப்பேரரசு வைரமுத்து, வித்தக கவிஞர் பா. விஜய் ஆகியோர் எனது கவிதை நூலுக்கு வாழ்த்துரை வழங்கியுள்ளனர். கவிக்கோ அப்துல் ரஹ்மான் தலைமையில் மலேசியாவில் நடைபெற்ற பன்னாட்டு கவியரங்கில் நான் பாடிய மரபுக்கவிதை எனது மரபு அறிவுக்கு சிறந்த எடுத்த

காட்டு என்று வைரமுத்து எனது நூலில் குறிப்பிட்டுள்ளார். கவிக்கோவும் அருகே அழைத்து தோள் தொட்டு என்னை அந்த கவியரங்கு நிகழ்வின்போது வாழ்த்தினார் அது என்வாழ்வில் மறக்க முடியாது. கவிஞர் மு. மேத்தா அவர்களின் நேரடி வாழ்த்தினையும் பெற்றுள்ளேன்.

இவர்களை வாசித்து கடந்து வராத கவிஞர்கள் தமிழில் இல்லை என்றே கூறலாம்.

- சாய்ந்தமருது தங்கள் மனைவியின் ஊர்அது தமிழுலகம் அறியப்பட்ட நவீன இலக்கியவாதிகள் நிறைந்த ஊர்தானே.

எனது மனைவி ரிப்கா பேகம் சாய்ந்தமருதை சேர்ந்தவர். ஆங்கில ஆசிரியை. எமக்கு அஹ்சப், அனீக்கா என இரண்டு மழலை செல்வங்கள் உள்.

நான் புகுந்த வீடான சாய்ந்தமருது மட்டுமல்ல இலங்கையின் கிழக்கு மாகாணமே இலக்கியவாதிகள் நிறைந்த இடம்தான். இங்கே ஒரு கல்லை எடுத்து வீசினால் அக்கல் போய் வீழ்வது ஒரு கவிஞரின் வீடாக இருக்கும் இல்லையெனில் ஒரு கலைஞரின் தலையாக இருக்கும். பாட்டாளிகள், படிப்பாளிகள் படைப்பாளிகள் நிறைந்த மண் கிழக்கு மண்.

- தற்போது சூழலில் இலங்கையில் இலக்கியவாதிகளுக்கு கலைஞர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப் படுகின்றதா?

இலங்கையில் கலை இலக்கியவாதிகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுகின்றன. இலங்கையில் ஒரு நூலாசிரியரின் நூல் வெளியீட்டின்போது பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டு நூலாசிரியரை ஊக்கப்படுத்துகின்றனர். நூல் அச்சிடுவதற்கு உண்டான செலவின் இரு மடங்கு பணத்தினை நூல் வெளியீட்டு நிகழ்விலே நூலாசிரியர் பெற்று விடுகின்றார்.

ஒரு மலையக கவிஞர் தேர்தலில்

# காலடியில் தாளலயம்

நீ நின்ற நிறுத்தம் எந்தன்
நினைவெல்லாம் இனிக்கும்
நீ நடந்த சாலை
என் கனவெல்லாம் நீளும்
பூவிற்கும் கடைபார்த்தால் உன்
இரட்டைசடை அழைக்கும்
புளியமர நிழல் பார்த்தால்
ஊஞ்சலாய் மனம் பறக்கும்
கடலோரம் மணல் பார்த்தால்
உன் காலடிகள் கதைக்கும்
திரையரங்கம் முழுதும்
உன் திருப்பெயரே ஒலிக்கும்
வகுப்பறைகள் நினைத்தால்
உன் வளையல் வட்டமடிக்கும்
துணிக்கடைகள் பார்த்தால்
உன் தாவணிகள் தழுவும்
மணிப்பார்க்கும் கடிகாரம்
மார்போரம் துடிக்கும்
மழைநாளின் குடைமறந்து
மனம்சேர்ந்து நனையும்
நூலகத்து நூலெல்லாம்
உன் அட்டைப்படம் தாங்கும்
காலமெனும் காலனுக்கு
நம்காதல் ஒன்றே கணக்கு
கவிதை ஒன்றே மருந்து
தீர்த்து வைக்கும் பிணக்கு
ஆலயங்கள் நுழைந்தால்
உன் அழகுமுகம் சிரிக்கும்
தாளலயம் எப்போதும்
உன் நாவினிக்கும் சொற்கள்
தவிடுபொடியானேன்
உன் தாழம்பு மணத்தில் .

**மு.பாலசுப்பிரமணியன்**
புதுச்சேரி, இந்தியா



போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பின ராகவேஆகியுள்ளார்.இலங்கைஅரசாங்கமும் படைப்பாளிகள் ஊக்கப்படுத்துகின்றது. நடுவரால் தேர்வு செய்யப்பட்ட நூல்களை இலவசமாக வெளியிட்டும் கொடுக்கின்றது. எனது கலை இலக்கிய ஊடகப் பணியை பாராட்டி இலங்கை ஜனாபதி மைத்திரிபால ஸ்ரீசேனா அவர்கள் விருது வழங்கி கௌரவித்துள்ளார்.

- தமிழகத்தில் ஒவ்வொரு வட்டாரத்தி லும் ஒவ்வொரு விதமான தமிழ் பேசப்படுகிறது.அதை உள் வாங்கி உங்களால் திரைப்பட பாடல் படைக்க முடியுமா?

தமிழ் சினிமாவில் பாடல் எழுதுகின்ற பாடலாசிரியர்கள் எவராயினும் ஒரு குறிப் பிட்ட வட்டார மொழியை சேர்ந்தவர் களாவே இருப்பர். அவர்களால் தமிழகத்தில் உள்ள அத்தனைவட்டாரமொழிகளிலும்பாடல்எழுத



முடியுமாயின் என்னாலும் முடியும் என்றே கூறுவேன். பாடலாசிரியர்கள் பாடலின் தேவைகருதிபலஆய்வுகள்செய்துதான்பாடல் எழுதுவர். தமிழகத்தின் வட்டார மொழிகளில் அமைந்த நாவல்களை நான் வாசித்துள்ளேன். திரைப்படங்களை ரசித்துள்ளேன். அவை எனக்கு துணைநிற்கின்றன. வட்டாரமொழி பேசுகின்ற மக்களின் பேச்சுக்கள், படைப்பு கள் இணைய வெளியெங்கும் சிதறிக் கிடக்கின்றன. அதனால் வட்டார மொழியில் பாடல் எழுதுவதில் சிரமம் இல்லை என்று நினைக்கின்றேன்.

- உங்கள் முன்னோர்கள் பிறப்பிடம் ராமநாதபுரம் மாவட்டம்.உங்களை போன்று இந்தியாவிலிருந்து புலம் பெயர்ந்து இலங்கையில் வாழ்கின்றவர்களை அங்கு ள்ளவர்கள் எப்படி நோக்கு கின்றார்கள்.

உலகத்தின் வரலாறே புலம்பெயர்வில் தான் உருமாறியிருக்கிறது. இன்று இங்கு இருப்பவர்கள் நாளை எங்கோ இருக்கலாம். எவருக்கும் எதுவும் நிரந்தமில்லை.

அவுஸ்ரேலியாவின்பூர்விகபழங்குடிகள் தமிழர்கள் இன்று யார் அதற்கு சொந்தம் கொண்டாடுகின்றனர்? இலங்கையின் பழங்குடிகளான இயக்கர், நாகர் தமிழ் சிங்களம் பேசியதாக எந்த சான்றுகளும் இல்லை. இங்கு இருக்கின்ற எல்லோருமே இந்தியாவின் பலமாநிலங்களில் இருந்து ஒவ்வொரு காலகட்டத்திலும் வந்து சேர்ந்தவர்கள்தான்.

மற்றவர்கள் எங்களை எப்படிப் பார்க்கின்றார்கள் என்பதைவிட நாங்கள் எங்களை எப்படி பார்க்கின்றோம் என்பதே இங்கு முக்கியமானது. நாம் எம்மை இலங்கையர்களாகவே பார்க்கின்றோம்.

- உங்கள் பாடலுக்கு இலங்கை தமிழ் மக்கள் மத்தியில் வரவேற்பு எப்படி உள்ளது?

தமிழகத்தை சேர்ந்த ஒருவர் தமிழ்



அஸ்மின் - இசையமைப்பாளர் தாஜ்நூருடன்

சினிமாவில் பாடல் எழுதிவிட்டால் அது சாதாரண சம்பவம்தான். ஆனால் இலங்கையர் எந்த வடிவத்திலும் தமிழ் சினிமாவுக்கு பங்களிப்பு செய்தாலோ அது இருபது ஆண்டுகள் இலக்கிய உலகில் வராதபுகழைதமிழ்சினிமாவில்பாடல்எழுத ஆரம்பித்து ஆறு ஆண்டுகளுக்குள் நான் அடைந்துள்ளேன். தமிழ் சினமாவில் பாடல் எழுதிய பிறகுதான் என் கவிதைகளுக்கும் சரியான கௌரவம் கிடைத்துள்ளது. ரசிகர்களும் அதிகரித்துள்ளனர் என்று சொல்லலாம்.

- எதிர்காலத்தில் பொத்துவில் அஸ்மின் எப்படி அறியப்பட வேண்டும்.

தமிழ் சினிமாவின் சிறந்த பாடலாசிரியர்கள் வரிசையில் எனது பெயரும் பதியப்பட வேண்டும் என்றே நான் விரும்புகின்றேன். அதற்கான முயற்சியின் ஆரம்ப நிலையில் இருக்கின்றேன். என்றோ ஒருநாள் இந்த உலகே என் பாடல்களை, கவிதைகளை கொண்டாடும் என்று உறுதியாக நம்புகின்றேன்.

எந்தன் வானம்
எந்தன் பூமி
எந்தன் வாழ்க்கை கறுக்கட்டும்
எல்லாம் சேர்ந்து
என்றோ ஒரு நாள்
ஏவுகணையினை கருக்கட்டும்
அதுவரைக்கும் எந்தன் பெயர்
வெறும்
பொத்துவில் அஸ்மினாய்
இருக்கட்டும்.

- ஐம்பது ஆண்டுகளுக்கு பின்னர் இலங்கையிலிருந்து தமிழ் திரைப்பட பாடலாசிரியர்... ஏன் இவ்வளவு பெரிய இடைவெளி?

ஜெமினி கணேசன் நடித்த ‘எல்லோரும் இந்நாட்டுமன்னர்கள்’.என்றதிரைப்படத்தில் பாடலாசிரியர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் உதவியாளராய் பணி புரிந்த எமது மட்டக்களப்பு பிரதேசத்தை சேர்ந்த கவிஞர் ஈழத்து ரத்தினம் பாடல் எழுதியுள்ளார். அதுவே இலங்கையர் தமிழ் சினிமாவில் எழுதிய முதல் பாடலாகும்.

அதன் பின்னர் தொடர்ந்து நான் எழுதி வருகின்றேன்.எனக்குகிடைத்தஇந்தவாய்ப்பும் இலகுவாககிடைத்ததல்ல.‘நான்’திரைப்படத்தில் ஒரு பாடலாசிரியரை அறிமுகப்படுத்தும் நோக்கோடு விஜய் ஆண்டனி சர்வதேச ரீதியாக பாடலியற்றல் போட்டியொன்றை வைத்திருந்தார் அப்போட்டியில் இருபதாயிரம் போட்டியாளர்களுள் முதலிடம் பெற்று வெற்றி

யீட்டியதால்தான் எனக்கு தமிழ் சினிமாவில் பாடல் எழுதும் வாய்ப்பு கிடைத்தது. 2010 ஆம் ஆண்டு இலங்கையில் நான் உருவாக்கிய பாடலொன்றை முகநூலில் பாராட்டிய இயக்குனர் ஏ.வெங்கடேஷ்தான் என்னை தமிழ் சினிமாவில் அறிமுகப்படுத்துவதாக முதலில் அறிவித்திருந்தார். ஆனால் அதற்கு முன்னர் விஜய் ஆண்டனி என்னை அறிமுகப்படுத்திவிட்டார்.

- முதல் பாடல் வாய்ப்பு வழங்கிய விஜய் ஆண்டனி பற்றி?

நான் வாழ்வில் மறக்க முடியாத என்றும் மறக்கக்கூடாத மனிதர் விஜய் ஆண்டனி. கவிஞர் வைரமுத்து அவர்களுக்கு 'இதுவொரு பொன்மாலை 'பொழுது பாடல் எப்படி நல்ல ஆரம்பமாக அமைந்ததோ அதுபோல் 'தப்பெல்லாம் தப்பேயில்லை' பாடல் உங்களை உயரத்தில் இருத்தும் என்று அன்றே கட்டியம் கூறியிருந்தார்.

இவர் தமிழில் முதல் நாவலை எழுதிய மாயூரம் (மயிலாடுதுறை) வேதநாயகம் பிள்ளையின் பேரன் அவர். தமிழாற்றல் மிக்கவர். மிகச்சிறந்த உழைப்பாளி. எவ்வளவு உயரத்துக்கு சென்றாலும் கடந்த வந்த பாதையை மறக்காமல் தன்னடக்கதோடு பழகுபவர். தன்னம்பிக்கை மிகைத்தவர். நான் தமிழ் சினிமாவில் பெற்ற முதல் விருதினை அவருக்குத்தான் சமர்ப்பணம் செய்தேன். குறுகிய காலகட்டத்துக்குள் பலரை தமிழ் சினிமாவில் அறிமுகப்படுத்திய பெருமை அவருக்கு உண்டு. என் இதய இருக்கையில் அமர்ந்து இருக்கும் உன்னதமான மனிதர்களில் அவருக்கு என்றும் நிரந்தர இடமுண்டு.

- தமிழகதிரைப்படப்பாடலாசிரியர்களில் தங்களை கவர்ந்தவர்கள்?

நாவில் நடனமிடும்
நற்கவிஞர் வைரமுத்து
பாவில் நிதம் குளித்து
பாட்டெழுத கற்றவன் நான்
பாட்டரசர் வாலியையும்
குருவாக நெஞ்சிருத்தி
ஊட்ட வந்தேன்
தமிழால் தேன்.

- மேலும் தமிழ்நெஞ்சம் வாச்கர்களுக்கு சொல்லிக்கொள்ள விரும்புவது?

தமிழக முதலமைச்சர் மாண்புமிகு எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் உத்தியோகப்பூர்வ பாடல்களை நான் எழுதியுள்ளேன்.

பாடல்களுக்குமிகச்சிறப்பாகஇசையமைத் துள்ளார் நாயகன், பெட்டிக்கடை போன்ற படங்களுக்கு இசையமைத்துள்ள இசை யமைப்பாளர் மரியா மனோகர்.

இவர் வித்யாசாகர், மணிசர்மா, ஸ்ரீகாந்த் தேவா, யுவன் சங்கர் ராஜா, டி. ராஜேந்தர் போன்றவர்களிடம் ஒலிப்பொறியியலாளராக பணிபுரிந்தவர் · பாடல்களை பிரபல பின்னணிப் பாடகர்கள் பாடியுள்ளனர்.

இசைத்தொகுப்பின் வெளியீட்டு விழா பிரமாண்டமான முறையில் மிக விரைவில் சென்னையில் நடைபெறவுள்ளது.

இந்த அரிய வாய்ப்பினை வழங்கிய திரைப்பட தயாரிப்பாளர் கே.சி.பிரபாத் அவர்களுக்கும் இசையமைப்பாளர் மரியா மனோகர் அவர்களுக்கும் இதயம் நிறைந்த நன்றிகள்.

தமிழ்நெஞ்சம் இதழ் வாசகர்களுக்கும் நன்றியினை தெரிவித்து மகிழ்கிறேன்.

கவிஞர் அஸ்மின் அவர்களின் பேட்டியை முடித்தவுடன், எனக்கு முகமது ரஃபி அவர்கள் பாடிய பாடல் ஒன்று நினைவிற்கு வந்தது.

"Although we hail from different lands,
we share one Earth, one Sky and Sun.
Remember friends the world is one."

# புலர்




## நெய்தல் நாடன்

அன்று மணி எதிர்பார்த்திருந்த சம்பளம் அதோ கதிதான். சம்பளம் குடுக்கிற காண்ராக்டர் எடுபிடி மாறன் ஏமாத்திட்டான். இவன் எப்போதும் போல தன் கோவத்தைத் தீர்ப்பது வழக்கம். வேலைக்குப் போகாமல் மாடிமேல போட்டிருந்த ஓலைக்கொட்டில் முகட்டைப் பாத்தபடி ஒரு கால நடுவில முட்டுக் குடுத்து நிண்ட தடியில அழுத்தி மல்லாக்கா படுத்துக் கிடக்கிறான். அவ்வப்போது ஈரங்கசியும் தென்றல் தொங்கிய ஓலை இடுக்குகளின் வழி வீசியது.

அது அவன் வேலை பார்க்கும் கம்பனியின் தங்குவிடுதி. இவன் சிஃப்ட் வேலையாட்கள் கம்பனிக்கு சென்றுவிட்டார்கள். அரைமணி நேர நிசப்தம் கொட்டகை முழுவதும் நிலவியது. மணி கண்களைத் திறந்தபடி கிடக்கிறான்.

சிறிது நேரம் கழித்து டொக் டொக் டொக் சத்தம். கீழ்த்தள மாடிப் படிகளில் செருப்புகளின் சத்தம். சில வினாடிகளில் அந்தப் சிஃப்டில் அவசர விடுமுறை கேட்டுத் தங்கள் ஊர் சென்ற ஐந்தாறு பேர் தவிர மீதமுள்ளவர்கள் விடுதியில் உள்ள தங்கள் பெட்டிகளைத் திறந்து துணி எடுப்பவரும், ஒருசிலர் தம்மிடம் இருந்த ஒருசில வெள்ளைத் தாள்களில் தங்கள் பெற்றோருக்குக் கடதாசி எழுதுபவர்கள், இன்னும் சிலர் இரவு முழுதும் கம்பனியில் இறால்களோடும் ஐஸ்கட்டிகளோடும் கம்பனியின் உள்ளேயே விடுதியில் அடைத்து வைத்து வேலைக்கு வந்த ஆண்களிலும் ஐந்து மடங்கு தொகையான பெண்களின் வேலை அடாவடித் தனங்களையும் பேசிக் கொண்டார்கள். இன்னும் சிலர் நேரம் அளவிடுபவர்கள், கீழுள்ள குளியலறை வாசலில் வரிசையில் காத்திருந்தனர்.

நகர வாழ்க்கை மாறியதென்னவோ உண்மைதான். சிலர் வாய் நவீனத்தை கொப்பளித்துக் கொண்டிருந்தது. வயது பெருத்தவர்கள் வாயில் வேப்பங்குச்சி இரையாகிக் கொண்டிருக்கிறது இன்னமும். சிலர் அவசர அவசரமா சுடுசோத்தில் அவிச்ச கறுப்புக் கடலை மிதக்க ஊதி ஊதி



சாப்பிட்டு முடித்துக் கொண்டனர். ஒரு சிலர் பக்கவாட்டில் மறைக்கப் பட்டிருந்த கிழிந்த ஓலைகளின் இடுக்கு வழியே பக்கத்து தெருவழி நடந்தவர்களைப் பார்த்தபடி பேசிக் கொண்டிருந்தார்கள்.

இறுதியாக படி ஏறி வந்த பெரியவர் மணி உனக்கு மணியாடர் வந்திருக்கு, இந்தாப்பா பிடின்னு சிரித்தபடி லெட்டர்க் கவர் ஒன்றை நீட்டிக் கொண்டே, என்ன அடுத்த பொழி நாத்து வாங்கப் பணம் வேணுமா அந்த கிழவனுக்கு? இல்ல உரம் வாங்கணுமா? ஏண்டா மணி நீயும் வாங்கிற சம்பளமெல்லாம் எப்பபாரு அப்பன் நாத்து வாங்கணும், உரம் வாங்கணும்னு பணம் அனுப்பிகிட்டே இருக்க, பருவத்துக்கும் வெள்ளாமையெல்லாம் மழை வெள்ளத்தோடு போயிடுது. இல்லண்ணா ஆளக் கொல்லுற வெய்யில் வந்து நிலத்தையே நாசம் பண்ணிடுது. நம்மகூட வேல பாக்கிற உன் வயசுப் பசங்களப் பாரு சம்பளம் கிடைக்கலிண்ணாலும் அட்வான்ச வாங்கிட்டு ஊரசுத்தி சினிமாவும் பாத்துகின்னு பீச் பார்க்னு அவங்க வாழ்க்கைய வாழுறாங்க. நீ ஒரு சீவன்தான் அப்பன், ஊரு, நிலம், வாய்க்கா, கம்மாயின்னு ஆளுமட்டும்தான் இங்க மொத்த உசிரும் அங்கிட்டுதானே கிடக்குப்பா.

என்னமோப்பா...!

‘.................’

ஏம்பா மணி நீ இன்னைக்கு வேலைக்குப் போல? ஏதாச்சும் உடம்புக்கு முடியலியா? என்றார் லெட்டர் கவர் தந்த பெரியவர். குளிர்ந்த தண்ணிரில் விழுந்துவிட்டது போல அவன் உடம்பு விறைத்து எழுந்தான். ஒண்ணு மில்லண்ணே! அப்பா பணத்துக்காக பாத்திட்டிருக்க போறாரு. இந்தக் கருவாயனக் காணோம்ணே. இவனுக சும்மா ஏமாத்திக்கிட்டே இருக்கானுக. இன்னிக்குத் தேதி இருபத்தொண்ணும் ஆச்சு. இன்னும் சம்பளத்தப் போடக் காணோம்ண்ணே அதான்....

இவன் அப்பா மாரிமுத்து ஒண்ணின்னா போதும் மவனுக்கு லெட்டர் எழுதிப் போடுவாரு. பேரில மட்டுந்தான் முத்து. ஆனா உடுத்திகிட்ட ஒத்த வேட்டி, எப்பவுமே தோளில கிடக்க வேண்டிய துண்டு தலையிலையே கிடக்கும். ஒண்டிக் கிடக்க வீடிண்ணு ஒண்டில்ல. அதுக்கு அவங்க அப்பன் சொத்து சேக்கல. அவங்க ஊருப் பக்கம் எல்லையில இவங்க அப்பன் வாழ்ந்த வீடில்ல செத்துப்போன ஒத்த குடிசதான் இவருக்கு.

அப்பன் எப்பவுமே கடதாசி எழுது றதுக்கு ஒரே காரணம் நிலத்தில போட்ட நாத்துக்கு உரம் வாங்கணும். இல்ல ஏதாச்சும் அந்த நிலத்துக்குச் செய்யணும். மனுசன் வயசு போச்சின்னிட்டு சும்மா கிடக்கிறதில்ல. நிலத்த உழுவுறதுக்கு கூட நாலுகாசு சம்பாதிக்க முடியல்லன்னுதான் வயசான காலத்திலையும் கிழவன வயக் காட்டில தனியா விட்டுப் பட்டணம் கிளம்பி வந்துட்டான் மணி. அவனும் மாசா மாசம் கிடைக்கிற எட்டாயிரத்தில அம்பது நூறு தன்னோட செலவுக்கு எடுத்துகிட்டு மிச்ச சம்பளம் மொத்தமா அனுப்பிடுவான் அப்பனுக்கு. அவன் பட்டினம் வந்து ஏழு வருசத்தில அவன் வேலபாக்கிற கம்பனி முதலாளி இன்னோரு கம்பனிக்கு ஆளுகள கொண்டாந்திட்டாரு. இவன் அப்பன் ஒரு மூட்ட நெல்லுமணிகூட வீடு கொண்டிட்டு போகல. இதுதான் இவன் புளப்பு. ஒவ்வொரு லெட்டரிலும் இவன் எதிர்பார்க்கிறது ரெண்டே சேதிதான். அப்பனோட உடம்பு நலம், மத்தது அவர் விதைச்ச நெல்லுமணிகள் என்னைக்கச்சும் ஒருகாலம் அறுவடையாகும் என்பதுதான்.

அப்படி நடந்து அவனோட சொந்த நிலத்தில ஒரு புடி அரிசியாச்சும் விளைய வைச்சாத்தான் அவன் மாமன், பொண்ணு தருவேன்னு சொல்லிட்டாரு. இது இவன நல்ல வழிப்படுத்த அப்படிச் சொன்னது வீண் வம்பாகி மணி அப்பனுக்கும் மாமனுக்கும் வாய்த் தகராறா ஆகிடிச்சு. இந்த அடாவடி நடந்து ஏழு வருசமாகிடிச்சு. இது இவன் மனுசுக்கும் இவன பெத்த கிழவனுக்கும் மாமனுக்கும் மட்டுமே தெரிஞ்ச சமாச்சாரம். அத இவனால

வெளிய சொல்ல முடியாம மனசுக்குள்ளயே வச்சு புழுங்குவான்.

அவன் ஊருக்கு பட்டினத்தில இருந்து விடிய காலை அஞ்சு மணிக்குத்தான் முதல் பேருந்து. இவன் அவசர அவசரமா இரவு பத்து மணிக்கெல்லாம் கிளம்பிட்டான். சம்பளப் பணத்தில தன்னோட செலவுக்கு எடுக்கிற காச கொடுத்து ஆட்டோ பிடிச்சு ஒரு ஊரையே வளைசுப் போட்ட மாநகரப் பேருந்து நிலையத்துக்கு ரெண்டு மணி நேரத்தில வந்து சேந்திட்டான். பேருந்து நிலையம் சன நெரிசல் சற்றுக் குறைஞ்சு இரவு நேர கடைசி வண்டி மட்டும் நேரம் எதனாலோ தாமதமாகி நடத்துனர் பயணிகளிடம் வாக்குவாதம் நடத்தினார். பிளாட்பார டீக்கடைகள் மட்டும் நீராவி பறக்க ஒரு சிலருக்கு டீ ஆத்திக் கொண்டிருந்தார்கள் டீக்கடைக் காரர்கள். சில பயணிகள் தாங்கள் போக வேண்டிய பேருந்துகளைத் தவற விட்டு அடுத்த பேருந்து ஏதாவது வருவது தெரிகிறதா எனத் தலையை நீட்டி எட்டிப் பார்த்துச் சலித்துக் கொண்டனர். சில மணித்துளிகளுக்கு ஒரு முறை மாநகரப் பேருந்து நிலைய ஒலிபெருக்கி மட்டும் கரகரக்கத் தவறவில்லை.

மணி, அந்த கரகரப்பு ஒலியை அவதானித்து விட்டு டீக்கடைக் காரரிடம் தான் எதிர்பார்க்கும் பேருந்து நேரத்தை விசாரித்தான். ஏப்பா! அது விடியக் கால அஞ்சுஅஞ்சேகாலுக்குதான்பாகிளம்பும்!நடு சாமத்தில எந்த வண்டியும் கிடையாதுப்பா. டீக்கடைக் காரர் பதிலளித்தபடி உனக்கும் டீ வேணுமா? என்ற முகத்துக்கு பதிலளிப்பவன் போல, சரிண்ணே, எனக்கு ஒரு டீ குடுங்க. இரவு முழுதும் டீ ஆத்தி களைத்திருந்த அவர் முகத்தைப் பார்த்த மணிக்கு அவரை தன் சந்தேகக் கேள்விகளால் தொந்தரவு பண்ண விரும்பவில்லை. அவர்களின் அன்றாட வாழ்க்கை இந்த மாநகரப் பேருந்து நிலையத்திலே கழிகிறது. இந்த மாநகருக்கு கிராமப் புறத்திலிருந்து வேலை தேடி வருபவர்களின் நிலை என்ன என்று இரவு முழுவதும் மணி டீக்கடைக் காரர்களின் ஓய்வில்லா வேலையினை கண்டு

# "தமிழோடு தமிழ் பேசுவோம்"

"தென்றல்வந்து உலவுகின்ற
தென்பொதிகைச் சாரலிலே
கன்னலெனப் பிறந்தவளே!
கன்னியென வளர்ந்தவளே!
என்னருமைத் தமிழ்த்தாயே,
எளியவனும் உந்தன்பிள்ளை;
உன்னருமை பெருமைகளை
உன்மொழியால் பாடவந்தேன்."

"ஐந்துவகை இலக்கணங்கள்
அணிகலனாய்ப் பெற்றவளே!
ஐந்துபெருங் காப்பியங்கள்
அவனியிலே படைத்தவளே!
ஐந்துவகை நிலங்களிலே
அரசியென ஆட்சிசெய்தாய்.
பைந்தமிழாய்ப் பரிணமித்தே
பாரினிலே புகழடைந்தாய்!"

"ஆதிமொழி உந்தனுக்கே
அகத்தியமாம் இலக்கணத்தை
ஓதியநற் குறுமுனியும்,
ஓங்குபுகழ்க் காப்பியனும்
பாதிரியாம் மாமுனியும்
படைத்திட்டார் இலக்கணங்கள்.
சோதியெனச் சுடர்விளங்கிச்
சிறந்தாயே என்தமிழே.!"

"ஓரடியால் உலகமுய்ய
ஒழுங்குசொன்ன ஔவையுடன்
ஈரடியால் வாழ்வுநெறி
இயம்பிவைத்த வள்ளுவனும்,
நூறெனவே நான்குமைந்தும்
நூல்படைத்த பெரும்புலவர்
வேறெந்த மொழியிலுமே
இவர்போலே கண்டதில்லை."

"இத்தரையில் வழங்கிவரும்
இன்தமிழாம் எம்அன்னை
முத்தமிழாய்ப் பரிணமித்தே
முழங்குகிறாள் இன்னிசையாய்.
சித்திரையில் வான்வெளியில்
சிரிக்கின்றாள் முழுமதியாய் ;
தத்திவரும் குழவியெனத்
தழுவுகிறாள் எம்மனத்தை."

"தமிழரெல்லாம் தமக்குள்ளே
தமிழிலேயே பேசவேண்டும்.
தமிழாய்ந்தோர், அவைகளிலே
தலைமையிடம் பெறவேண்டும்.
தமிழெங்கள் அன்னையவள்
தரணிதனை ஆளவேண்டும்.
தமிழொன்றே மொழிகட்கெல்லாம்
தலைமையென ஆகவேண்டும்."

- இராஜகுரு ரத்தினம்.

வியந்தபடி தன்னைப் போல் இவர்களும் என்று மனதுக்குள் எண்ணி பேருந்திற்காக காத்திருந்து கண்ணசந்து விட்டான்.

எங்கிருந்தோ வந்த பேருந்தின் காஹ்ர்ன் சத்தம் அவன் தூக்கத்தைக் கலைத்தது. அதிர்ச்சியில் எழுந்தவன் அருகில் அவன் பயணிக்க வேண்டிய பேருந்து கெட்லைட் இரண்டும் பிரகாசிக்க எஞ்சின் இயங்கிக்கொண்டு புறப்படத் தயாராகிவிட்டது. அவசரமாகக் கண்களைக் கசக்கியபடி கொண்டு வந்த பையையும் எடுத்துக் கொண்டு பேருந்தில் ஏறினான். பேருந்து நடத்துனரின் விசில் சத்தத்தில் மெல்ல நகர்ந்து பேருந்து நிலையத்தை விட்டு வெளியேறி பிரதான சாலையில் சென்றது. மாசிப் பனி உறைந்து கிடக்க மெல்லிய ஈரம் கசிந்த காற்று பேருந்து சன்னல் வழி வீச கலைந்த தூக்கம் திரும்பியது.

பேருந்து வேகம் அதிகமாக குளிர் தூக்கத்தைக் கலைத்தது. சன்னலை இழுத்து மூடிவிட்டு மீண்டும் தூங்கிவிட்டான். வழியில் இரண்டு இடங்களில் பேருந்து நிறுத்தப்பட்டது. அங்கிருந்து அவன் ஊர் வண்டியில் ஏறும்போது மணி எட்டாகிவிட்டது. மணி ஊருக்கு போற வண்டி அதுதான் கடைசி. நத்தை யோட முதுகுமேல யாரு ஓட்டத் தூக்கி வைச்சாங்களோ? பாவம். அதுபோல கிராமத்துப் பேருந்து மேல அதவிடப் பெருசா இருக்கு பேருந்து சுமந்து போற பொருட்கள். பேருந்தில் இரு பிரதான விளக்குகளும் இருளில் கிராமத்துப் பாதையினைத் தேடி ஊந்து செல்கிறது. மழையின் தூறலில் நனைந்த பாதைவழி நெடுக்க தேங்கி நின்ற மழைநீரின் சலசலப்போடு செல்கிறது கிராமப் பேருந்து. பகல் பொழுது முழுவதும் ஆரவாரத்துடன் மழையை வாங்கிய வயல்வெளிகள் இரவு மௌனித்து மெல்ல வருடும் தென்றலில் லேசாகசலசலப்பது மட்டும்காதில்விழுகிறது. அந்த இன்பத்தை கண்டுகளிக்க விடாமல் இருள் மூடிக் கிடக்கிறது. வயல்களில் காற்று வாங்கிக் கொண்டு சென்ற கிராமப் பேருந்து ஆங்காங்கே ரோட்டோரக் கடைகளுக்கு காய்கறி மூடைகளைத் தள்ளிவிட்டு கூட வந்தவர்களையும் இறக்கிவிட்டுச் செல்கிறது. வேலைக்காகப் பட்டணம் போய்விட்டு மாதங்கள் பல மாடாய் உழைத்துவிட்டு வருடத்தில் ஒருமுறை சொந்த ஊருக்கு வருவதென்பது வாழ்வின் தனிசுகம்.

அதிலும் இவனுக்கு முற்றிய நெல்மணி களின் சலசலப்பை கேட்டு அவன் தொலைத்த வாழ்வே திரும்பக் கிடைத்த மகிழ்ச்சி. மணி செல்லும் கிராமப் பேருந்து நடத்துனருக்குச் சொந்த ஊரு பக்கத்தூருதான். அதனால அவர் அடிச்ச விசில் சத்தம் அந்த ஊருப் பேருந்து நிறுத்தத்தில் மட்டும் நாலஞ்சு தடவை. ஓட்டுநர் கோவத்திற்கு ஆளாகும் நிலைவர, இருப்பா நம்ம ஊருப் பயகூட சத்த பேசிக்கிறேம்பா!

இது ஓட்டுனருக்கு புரிந்ததுவோ இல்லையோ அவர் சமாதானமாகிட்டார். அந்தப் பேருந்து கடைசிப் பேருந்துதான். அதனால பேருந்தில் இருந்த ஏழெட்டு பயணிகளும் அலட்டிக்கவில்லை. அவரவர் தூக்கம்தான் இப்போ அவசியம் ஊரு வந்ததும் அவங்களே இறக்கி விடுவாங்க என்றே தூங்கிட்டாங்க சன்னலோரம் சாஞ்சு. மணி பேருந்து நடத்துனருக்கு கையசைத்து விடவும் பேருந்து காற்றில் பறக்கிறது.

மின்மினிப் பூசிகள் இரண்டு ஒன்றை ஒன்று விட்டுக்கொடுக்காமல் சமநிலையில் பறப்பது போல. ஊரிலுள்ள சனமெல்லாம் தூங்குதுக தெருவோர டீக்கடை மட்டும் கடைசி பேருந்துக்காகவே திறந்து வைச்சமாதிரி பேருந்து போனதும் கடையடைக்க ஆயத்த மாக்குராரு டீக்கடைக்காரரு. மணியைக் கண்டதும் என்னப்பா இப்பத்தான் ஊருக்கு வர்றியா? சத்த முன்னாடிதாப்பா உன் அப்பன், பதினைஞ்சு நாள்ள கதிரறுப்பு வந்திடும் ஆளுகளத் தேடிப் பிடிக்கணும், நான் ஒண்டியா எல்லாச் சோலியையும் ஒரே நேரத்தில பாக்க முடியாதுப்பா. பையன் வேற ஊரில இல்லனு போனாரு. அந்த மனுசனோட நல்ல நேரம் நீயும் வந்துசேந்திட்டியேப்பா! இந்தாப்பா டீ சாப்பிடு மிச்சத்த விடியகால பேசிக்கலாம். முதல்ல உங்கப்பன போயி பாரு அந்த சீவன் உனக்காக மட்டுந்தாப்பா உசிரோட இருக்கு

இன்னமும்.

அது சரிதான் எவ்வளவுதான் பட்டிணத்தில போயி சம்பாதிச்சாலும் அப்பபனுக்கு பக்கத்தில இருந்து குடிக்கிற நாலு வாயி கஞ்சி நாக்க நீட்டி நக்கினாலும் கிடைக்காது பட்டணத்தில அது எனக்கும் தெரிஞ்சதுதான். நான் ஏதோ வீம்புக்கு வெளியூர் போயி சம்பாதிக்கணும்னு ஒத்தக்கால்ல நிக்கல்ல.

நம்ம ஊருக் காலநிலை நாலு பாதாளம் தள்ளிப் போனதுமாதிரி சரியான நேரத்துக்கு இந்த பூமிய நனைக்கிறதில்ல அந்த கரு மேகங்கள். அதுகளுக்கென்ன ஊரில யாரிருக் காண்ணு பக்கத்து மேகத்த விசாரிச்சுக் கொண்டு போகுதுகளே ஒழிய நிலத்தில விழுந்து விசாரிக்கிறதா தெரியல்ல! நாங்க பணத்தத் தேடுறோம். மழை மேகங்கள் எதையோ தேடுதுக.

போதும்பா மணி உன்னோட வேதன எனக்கு புரியுது, கூடவே இந்த நிலத்துக்கும்கொஞ்சம்புரிஞ்சது போல வெள்ளாம எல்லாம் கருக்கட்டி நிக்குதுக. அப்பன் துணையில்லாமக் கஸ்ரபடாம இருக்க வந்திட்டியே நீ! அதுவே போதும். டீக்கடைக்காரர் சொல்வதெல்லாம் கேட்டபடி நடக்கிறான் இருள் சூழ்ந்த தனிமையில். ஊரே கூடித் தூங்கினாலும் அவங்க ஊரு பண்ணையார் வீட்டில மட்டும் விடிய விடிய எரியும் விளக்கு வெளிச்சம் தெரிகிறது. ஊருக்குள்ள உயரமாவும் பெரிதாவும் பார்த்ததும் அடையாளம் காணக்கூடியதுமான வீடின்னா அது பண்ணையார் வீடு மட்டுந்தான்.

அருகில நிண்ட ரோட்டோர அரசமரத்தின் சலசலப்பும் வயல் நெல்மணிகளின் சல சலப்பும் வசந்தத்தில் குதூகலிக்க காலம் அவனை வெகுநாள் எங்கோ தள்ளிவிட்டது போல எண்ணிக் கொண்டான். பாளம் விழுந்த வண்டல் மண்ணில் புதைந்து கிடந்து முச்சு மட்டும் விட்ட தேரைகள் வயற்சேற்றில் கத்திக் கும்மாளமடிக்கின்றன. என்னைத்தான் இதுகள் வைகின்றனவோ? என்று மனதில் எண்ணிக் கடக்கின்றான். ஊர்மனையின் கோடிவரை செல்லவேண்டும் வீட்டுக்கு. வழி நெடுக்க இனந்தெரியாத வலி உட் புகுந்தது. கனத்த இருளும் அவனைக் கேள்விகள் கேட்பதுபோல உணர்ந்தான்.

ஏன் இந்த அங்கலாய்ப்பு? ஒரு வாழ்க்கைக்காக இன்னொன்றை எதிர்

## கற்றலும் கற்பித்தலும் கடனல்ல

அகமும் புறமும் எழில்நிறைக்க மாந்தர்களுக்கு
கற்றல் என்பதே அறிவாற்றலின் முதற்படி...

வாழ்வின் அத்தியாயங்கள் ஒவ்வொன்றும் கற்றிடவே
வார்த்தைகளால் மொழியும் வரங்களைப்
பெற்றிடுவோம்...

கற்றலில் வென்றோன் தோற்றோனைச் சாடுகின்றான்
குற்றமெனச் சான்றோன் கொற்றம்வரைப்
பாடுகின்றான்...

கற்றலும் கற்பித்தலும் கடனல்ல கடவோர்க்கு
கதையும் கவிதையும்
கடமையன்றோ கவிஞனுக்கு...

ஊழலில் நிறைந்து சூழலில் மறைந்து
ஆழத்தில் உறைந்தும் தாழ்வதில்லை தமிழே...!

விழிதேடும் மொழியெல்லாம் செழிந்தோடி வழிதேடும்
பொழியாத சுழியத்தில் அழியாது வழிந்தோடும்...

நல்லொழுக்கம் பேணி
நினைவாற்றல் பெருக்கி
தனித்தன்மையை நிலைநிறுத்தி
நோக்கத்தை எட்டிட வேண்டுமேயானால்...!

கசடற கற்றிடுக! கடமைதனைப் பெற்றிடுக!

**- கௌதமன் நீல்ராஜ்**

பார்த்திருக்க வேண்டுமா? எதற்கு இப்படி ஊர் விட்டு ஊர் சென்று உறவுகளைப் பிரிந்து ஊருசனங்கள மறந்து ஒருகசப்பான அனுபவம்? வாழ்க்கை இவ்வளவு தூரமா? இதுக்கெல்லாம் பதில் அந்த இருளில் எப்படிக் கிடைக்கும்?

அவன் வீடு வந்து சேர நேரம் நள்ளிரவையும் தாண்டிவிட்டது. கருவேல முள்ளுத் தடிகள ஒண்ணா சேத்து கட்டி வைச்ச வாசக் கதவ மெதுவா எடுத்து வைச்சுத் திருடன் போல உள்ளே போறான் மணி. அவன் அப்படி போறதுக்குக் காரணம் உண்டு. எங்கே பல மாசமாக் காணாத சீவன் நடுராத்திரில தூக்கம் கலைஞ்சு போகுமேண்ணுதான். போனவன் ஒண்டியா அந்த வீட்டுல தூங்கிகிட்டிருந்த தன்ன பெத்த சீவன சத்த நேரம் வைச்ச கண்வாங்காம பார்த்தான். ரொம்ப தூரப் பயணக் களைப்பு ஒருபுறம் வயித்துப் பசி மறுபுறம் பக்கத்திலயே கண்ணசந்திட்டான்.

அதிகாலைப் பனியில் தவழ்ந்து வந்த இதமான தென்றல் மெல்ல அவன் போர்வையைவிலக்குகின்றது.கண்விளித்தவன் வீட்டுச் சேவல் கூவியது கூடக் கேட்காம உறங்கிட்டான். உறக்கம் முறித்தவன் அதிர்ந்து போனான். அருகில் படுத்துக் கிடந்த அப்பனக் காணல்ல. சூரியன் உடம்பெல்லாம் சூடேற தன் கைகளை மண்ணுமேல நீட்டுகின்றான். தெருப்பக்கம் பாக்கிறான் பக்கத்து ஊருப் பிள்ளைக ஐஞ்சாறு வரப்புவழியா பள்ளிக்குப் போகுதுக, பேச்சுக் குரலில் கேட்கிறது. அவர்களின் பேச்சில் பள்ளித் தாமதத்தின் உளறல்கள் தொனிக்கிறது. அதிலிருந்து அவன் அந்த நேரத்தைக் கணித்துக் கொண்டான் மணி பத்தை எட்டுகிறதென்பதை. அவசர அவசரமாக அப்பனைத் தேடிக் கிளம்பிவிட்டான்.

நேற்றிரவு பேருந்திலிருந்து வரும்போது கேட்ட நெற் கதிர்களின் சலசலப்பு எல்லாம் காலையில் அவனுக்கு எதிர்ப்பட்டது. கண்கொள்ளாக் காட்சி அது. பச்சைமீது பொன்மஞ்சள் படிந்த வயல்வெளிகள். ஊரைச் சுற்றி முழுதும் கதிர்கள் முற்றி இவன் மனம் முழுதும் படர்ந்து கிடக்கும் எதிர்பார்ப்புகள் போலக் கனக்கிறது கதிர்களின் நுனியில் விளைந்து.

இவன் இருப்பதோ ஊரின் எல்லை. போவதென்றால் ஊருக்குள் சென்றுதான் தேட வேண்டும். வயல்களின் விளைச்சல் மனதிற்கு சுகமளித்தாலும் வலியை உண் டாக்குவது கண்டும் ஒருவார்த்தை கூடப் பேசாது சென்ற பெத்தவன் எண்ணம்தான். தெருவுக்குள் நுழைந்தவனைக் கண்ட தோழர்களும் அயலவர்களும் சேதி கேட்கு முன்னர் அவன் பேச்சு முந்தி அவர்களை திகைப்பூட்டியது.

கோபி அப்பனப் பாத்தியாடா? இல்லடா மணி! ஏண்டா? நீ பட்டணத்தி லேர்ந்து எப்படா வந்தாய்? நேத்திக்கு இரவுதாண்டா.. கோபி இவன் பதிலுக்காக காத்திருக்கவில்லை. அவன் சைக்கிளில் ஏதோவொரு கனமான மூடை ஏற்றிக் கொண்டு சென்று மறைகின்றான். கோபி நிதானித்து நின்று பேசவில்லை. இவனும் வண்டிக்காரன் தெருவின் மூன்றாவது சந்தில் திரும்பினான்.

தெருவோர அத்திமரம் நிழல் விரித்து வெயில் காய்கிறது. அத்திப்பழங்களை மரத்திலுள்ள கிளிகள் கோதிய துகள்கள் அவன் தலைமேல் விழ, முழுமையான பழங்களும் சில சேர்ந்தே விழுந்தன. தலையைத் தட்டி விட்டுக்கொண்டு அண்ணாந்து பார்த்தான் இராப்பொழுது வெளுத்த வானத்தில் பலகோடி விண்மீன்கள் ஒன்றுகூடினாற் போல மரம் பூராவும் அத்திப்பழம் நிறைந்து கிடக்கிறது. கிளிகளும் குருவிகளும் ஒரே கூச்சலிட்டு சண்டை போட்டுக் கொள்கின்றன. கனத்த மனத்தோடு வந்தவனுக்கு என்றும் இன்பந்தரும் குருவி, சிட்டுகளின் கூச்சல் இன்று இடி விழுந்தற்போல இரைந்தது. நடைக்கு விறுவிறுப்புக் கொடுத்து விரைகிறான்.

சொந்தம் என்று அந்த ஊரில் அவனுக்கு இருக்கும் உறவு அவன் மாமன் உறவுதான். இவன் பத்தாவது படிக்கையில் விளையாட்டுப் போக்கா வந்த பேச்சு வீண்

வம்பாகி என்னைக்கு அவங்க அப்பனுக்கும் மாமனுக்கும் அந்த அடாவடி நடந்திச்சோ அன்னைல இருந்து அவங்க வீட்டுக்குள்ள போறத நிறுத்திப்புட்டான் பயபுள்ள. முன்னாடி கூட மாமன் வீட்டுக்கு போவது குறைவுதான். தெருவில நிக்கிறான் மணி. எங்கு போவதென்று புரியவில்லை. எதிர்த்தாபோல வந்து நிக்கிறா மூக்கி. அன்னைக்கு மாமனுக்கும் இவன் அப்பனுக்கும் நடந்த அடாவடிய பாத்த ஊரிலஒருத்தின்னா இந்தமூக்கிகிழவிதான். ஏண்டா மணி நீ பட்டிணத்திலேந்து வரக்காட்டியும் ஏதாச்சும் பூகம்பமே வந்திடிச்சுப் போல? ஏன் கிழவி? என்ன சொல்லற? எனக்கொண்ணும் புரியல்ல? என்னைக்குமில்லாம கிழக்கால உதிக்கிற சூரியன் மேக்கால உதிச்சமாரி விடிஞ்சும் விடியாம மாமன் வீட்டு வயக்காட்டில உங்க அப்பனும் மாமனும் உக்காந்திருக்காக! என்னடா சேதி? ஏய் கிழவி நான் ராத்திரி தூக்கத்தில பாத்த அப்பனக் காணோம்னு அலஞ்சிட்டிருக்கேன்.

நீ...

இல்லடா! இல்லடா! பயப்புள்ளக்கு எப்போதும் எங்கூட மல்லுக்கட்டுறதே வேலையாப்போச்சு.வாயில முணுமுணுத்தாள் மூக்கி. மணி கிழவி சொன்னத நம்பல. போடா போயி உன் மாமன் வயக்காட்டு பம்புசெட்டில பாரு கிணத்துக் கட்டில ரெண்டுபேரும் இருப்பாங்க. அப்புறமா மூக்கி சொன்னது நிஜமா பொய்யான்னு உனக்கே தெரியும். பேசிட்டே கிழவி தலையில கொண்ணாந்த கூடைய இறக்கி இடுப்பில காவிக்கொண்டு அவ வீட்ட நோக்கிப் போறா.

மணி வண்டிக்காரன் தெருவுக்கு வந்து அவன் வீட்டில இருந்து ஆறாவது தெருவில உள்ள மாமன் வீட்டுக்குப் போறான். கிழவி சொன்னத நம்பவும் முடியாம நம்பாம இருக்கவும் முடியாம மெல்ல நடக்கிறான். இந்த கிழவிக்கு என்ன ஆச்சு? அப்படி எதாச்சும் நடந்திருந்தா என்னப் பாத்தப்ப கொடி எங்கிட்ட சொல்லி இருப்பாளே? அவகூட இதப்பத்தி எதுவும் சொல்லலியே! ஒருவேள அவளும் பாக்கலியோ? அவர்கள் இருவருமே பேசிக்கொண்டிருந்ததை? வாசக் கதவைத் திறந்து கொடி என்று கூப்பிட்டுகிட்டு உள்ளே போகிறான்.

வீட்டுள்இருந்துஎட்டிப்பார்ப்பதுமணியின் அத்தை. வா மணி.. என்ன ஊருப்பக்கம் வராம பட்டணத்திலியே தங்கிட்ட போல? பதிலை



எதிர்பாக்காமல் தொடர்ந்து பேசினாள். யாரு கண்ணு பட்டதோ ஏழெட்டு வருசமா மூச்சு பேச்சில்லாம இருந்தவக ரெண்டு பேரும் பின்னாடி பம்புசெட்டில ரொம்ப நேரமா உக்காந்திருக்காக. போயி என்னனுதான் கொஞ்சம் நீயே கேட்டுச் சொல்லுப்பா. அப்டியே நீயும் சத்த வந்து சாப்பிட்டு போப்பா.

தன் சத்தம் கேட்டு கொடி சன்னலோரம் வந்து நிற்பதை அவதானித்தான் மணி. அவனும்வீட்டுப்பின்புறம்உள்ளவீட்டுக்காக வளக்கப்பட வாழைமரங்களின் உட்புகுந்து வரப்புவழி வயக்காட்டுப் பம்புசெட்டுக்குச் சென்றான். மூக்கி சொன்னதும் அத்தை சொன்னதும் உண்மையாகிவிட்டது. இருவரும் பேசிமுடித்துவிட்டு வரப்புவழி வருகின்றார்கள். மணியின் அப்பா முன்னாடியும் மாமன் தொடர்ந்து வந்தார்கள்.

என்னப்பா நல்லா தூங்கினியா? என்றார் பெத்தவரு. மாமனும் வாப்பா, அப்பா சொன்னாரு பையன் தூங்கிட்டிருக்கான்னு. நல்லாருக்கியாப்பா? மாமன் என்னைக்குமே இவனைப் பேர் சொல்லிக் கூப்பிட்டது கிடையாது. வாப்பா போப்பானு கூப்பிட்டுத் தான் பழக்கம். மருமகன் எங்கிற மரியாதைய விட ஆம்பள என்கிற மரியாதை இவன் மேல அதிகம். ஏன்னா அவருக்கு ஒரே பொண்ணுதான் கொடி. அவுக வீட்ல ஆம்பிளப் பசங்க இல்ல. என்னப்பா மணி என்னைக்கும் போல அஞ்சு நாளைக்கு தங்கிட்டுப் போயிடுவியா என்ன?

‘..........’

இல்லப்பா இன்னும் பதினைஞ்சு இருபது நாள்ள கதிரறுப்புக்கு நாள் வந்திடும் என்னைக்கும் போலன்ன போச்சுனு விட்டி டலாம் இப்போ நீயே கண்டு கிட்டாயில்லா? இப்டி முகம் செய்து கிடக்கிறத வீணாகாம கொண்ணாந்து சேக்கணும்பா. நிறைமாசக் கர்ப்பிணியாட்டம் நிறைஞ்ச மனசோட விளைஞ்சு கிடந்த வயல்வெளியக் காட்டுறாரு.

மணிக்கு என்ன சொல்வதென்று தெரியாமல் வரப்பிலேயே நின்றுவிட்டான். மாமன் மெலிதான குரலில் ஏம்பா இந்த நேரத்திலதாம்பா அப்பாகூட நம்மல்லாம் இருக்கணும். நீ பட்டணத்தில சம்பாதிச்ச பணத்தில எதாச்சும் ஆச்சுதா? இல்லியே. அந்த மனுசன் ராப்பகலா காடு கரம்பயா சுத்தித்திரிஞ்சுகடன்பட்டுஇந்தவெள்ளாமய விதச்சு இன்னைக்கு முகஞ்சிரிச்சு நிக்குதப்பா உன் வயலெல்லாம். அதப் பத்திரமா வீடு கொண்ணாந்து சேத்திடுப்பா போதும். உன் பட்டணத்து கஸ்ரமெல்லாம் நான் உன்னப் பாக்க வந்து தங்கி நின்னு பாத்துத்தாப்பா வந்தவன். உன் அப்பனுக்கு கூட நீ படுற கஸ்ரம் தெரியாதுப்பா! சொல்லிவிட்டு இருவரும் அவனைத் தாண்டி வீடு செல்கின்றனர்.


இவனுக்கு பல வருசத்துக்கப்புறம் அப்பனும் மாமனும் பேசிகிட்டது பிடிப்பில்லாத வாழ்க்கைக்கு உசிரு வந்திரிச்சு. இருவரும் வாழைமரங்களுக்குள் மறைந்துபோக மணி மாமன் வயல்களை ஒருதடவை சுற்றிப் பார்க்கிறான். இந்தப் பட்டணம் என்னை என் ஊரிலிருந்து என் அப்பனிடமிருந்து என் ஊருசனத்தவிட்டு எட்டு வருடம் பிரித்துவிட்டதைஎண்ணிச்சினந்துகொண்டான்.

வேகமாக வரப்புகளைத் தாண்டி நடக்கின்றான். வாசக்கதவையும் தாண்டித் தெருப்பக்கம். வயலில் அப்பிக்கொண்ட சகதியினைக் கழுவிட்டு முற்றத்து மரநிழலில் இளைப்பாறிய மாமன் மணியின் பின்தொடர்கிறார். அவன் வண்டிக்காரன் தெரு கடந்து ஊர்ப் பிரதான சாலைக்கு வந்து டீக்கடையின் முன்பக்கச் சுவரில் தொங்கிக் கொண்டிருந்த தொலைபேசிக்கு கடைக்காரரிடம் ரெண்டு உரூவாவைக் கொடுத்து சில்லறை வாங்கி உரூவாவை போட்டு சில இலக்கங்களை அழுத்தினான். மறுமுனையிலிருந்து வந்த குரலில் கடுமை தென்பட்டது.

சனியனே! மணி ஒன்பதே முக்கா ஆவுது, இன்னும் என்ன பண்ணிட்டுக் கிடக்க அந்த மாடிக்கொட்டகைல. தொடர்ந்து அந்தக் கடுமையான குரல் கேட்கிறது. அது அவன்

வேலைக்குப் பொறுப்பான சூப்பவைசர் சசி. இப்போ நீ வேலைக்கு வர்றியா இல்ல நான் அங்க வரணுமா? தொலைபேசி துண்டிக்கப்பட்டு விட்டது. என்னப்பா மணி நான் தந்த கவரை என்னனுகூடப் பாக்காம என்னப்பா யோசன? கம்பனிலேர்ந்து ரெண்டு வாட்டி போன் பன்னிட்டாங்கப்பா மணி எங்க வேலைக்கு வரல்லியான்னு? உடம்புக்குமுடியல்லன்னாசொல்லுசசிகிட்ட நான் சொல்லிக்கிறேன். இல்லண்ணே! ஒண்ணுமில்ல நான் கிளம்புறேன் வேலைக்கு என்று சொல்லியபடி கவரை பிரித்துப் பார்க்கிறான். மடிந்து கிடந்த கடதாசியின் பின்புறத்தில் மணி பணம் கொஞ்சம் மணியார்டர் பண்ணுப்பா உரம் கொஞ்சம் வாங்கணும். இந்த வாட்டியாவது வெள்ளம கொஞ்சம் விளைஞ்சா நம்ம பட்ட கடன அடைச்சுடலாம்பா. உடம்ப பாத்துக்கப்பா. நீயும் கொஞ்சம் ஊருப்பாக்கம் வந்திட்டுப் போப்பா.

குளிர்நீரில் விழுந்தவன் போல விறைத்துப் பார்க்கிறான். மாநகரப் பேருந்து நிலையம் அதிகாலை அஞ்சு மணி என்பதனால் பயணிகளின் கூட்டம் அதிகமாகவே காணப்பட்டது. பயணிகள் அனைவரும் சுறுசுறுப்பாகவே காணப்பட்டார்கள். பட்டணத்திலிருந்து தங்கள் ஊருக்குச் செல்பவர்கள் ஒருபுறம், ஊர்களிலிருந்து பட்டணம் வந்திறங்கிய பயணிகள் ஒருபுறமென பேருந்து நிலையமே மிக சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. சட்டைப் பையில் கைகளை விட்டு பெரியவர் தந்த லெட்டர்க் கவரைத் தேடினான் கிடைக்கவில்லை. பையிலும் அது அகப்படவில்லை. சற்று தூரத்தில் அந்தப் பெரியவர், மணி.. மணி பஸ்சு வந்திடிச்சு, கிளம்பு சீக்கிரம் எடுத்திடப் போறான் அந்த டிரைவர்ப்பய.சத்தம்வந்ததிசைநோக்கினான். அதிர்ந்து போனான் மணி. நீங்கள் எப்போ இங்கு வந்திக? என்னப்பா மணி? நேத்திக்கு ராத்திரி ரெண்டு பேரும்தானே ஊருக்குப் போறதா யாருக்கும் சொல்லிக்காம கிளம்பி வந்தோம்! அப்புறம் என்னப்பா கேள்வி? என்றார் அந்தப் பெரியவர். ■



# ஹைக்கூ

●
மெல்லிய காற்றினில்
திசை திரும்பும் குடைக்குமேல்
முதல் துளியின் சத்தம்..

●
கைமாறிய குழந்தை
கண்கலங்கி நிற்கிறாள்
வாடகைத் தாய்..

●
பார்வையற்ற கலைஞன்
ஒருமுறை சரிபார்க்கிறான்
புல்லாங்குழலை..

●
விலை போன தாய்
திருப்பித் திரும்பிப் பார்க்கிறது
பால் குடிக்கும் கன்று..

●
கருவறைக் காட்சி
கண்கலங்கிப் போகிறது
ஓவியனின் படைப்பு..

●
நீண்ட நாள் தவம்
இன்றுதான் நிறைவேறியது
தாயின் வேண்டுதல்..

●
நீரோடை அருகிலேயே
நனைந்து நனைந்து காயும்
மூங்கில் மேல் மீன்கொத்தி..

●
இடைவிடாத மழை
இடம் பெயர்ந்து செல்கிறது
பிச்சைப் பாத்திரம்..

**- ரசி குணா**



# நூல் மதிப்புரை

## அன்புச்செல்வி சுப்புராஜூ




ஆசிரியர் குறிப்பு :

கவிமலர்கள் பைந்தமிழ் சங்கத்தின் தலைவி. முகநூல் குழுமம் வழியாக பலவகைமைக் கவிதைப் போட்டிகள், கவியரங்குகள் நடத்தி கவிஞர்களை ஊக்குவிக்கும் தமிழார்வலர்.. சமீபத்தில் இச்சங்கத்தின் சார்பில் "கவிமலர்கள் 1130 கவிதைகளின் சங்கமம்" என்ற தலைப்பில் 1130 கவிஞர்களின் கவிதைத் தொகுப்பினை வெளியிட்டுச் சாதனை செய்து UNIVERSAL BOOKS OF RECORDS ல் இடம் பிடித்தவர்.

## மனத் தூறல்கள் :

காலத்தின் கண்ணாடியாக உலகத்தின் நிகழ்வுகளை எல்லாம் கவிதைகளாக வார்த்து வரலாற்றில் பதித்திடும் பதிவாளன் கவிஞன். அவ்வகையில் மனதில் தோன்றும் எண்ணங்களை உணர்வுகளை வாழ்வியல் நிகழ்வுகளை ஒருமுகமாகக் குவித்துச் செப்பனிட்டு செதுக்கிப் பல்வேறு பாடு பொருள்களில் பாங்காக பூத்தூறலாய் தூவிய பரவச மழையே "மனத்தூறல்" களாக நம்மை நனைத்து உள்ளத்தை ஊடுருவிச் செல்வதை உணர முடிகிறது.

"பொன்னை நம்பி வாழமாட்டோம்
மண்ணை மாட்டை
மாரியை நம்பி வாழுவோம்"

எனவும்..

"கரைச்சிக் குடிச்சக் கூழுக்குள்ள
கனவுகளும் நிரம்ப வைப்போம்"

போன்ற மண் மனம் மாறா வரிகளின் மூலம் அடுத்தவர்களின் உணவிற்காக உயிர் கொடுத்து உழைக்கும் விவசாயிகளின் நம்பிக்கையையும் நிமிர்வையும் கிராமிய வாழ்வியலையும் அழகுற எடுத்துரைக்கிறார்.

''ஏ கருவேலமே நீ நீயாகக் கருகிப் போ''

என மற்ற பயிர்களின் வளர்ச்சியைத் தடுக்கும் கருவேலமரத்தின் வளர்ச்சியைத் தடுக்கும் சமூகச் சிந்தனை சார்ந்த நோக்கம் சிறப்பு.

''அழுத்த பயம் என்னில்
அம்முக்குட்டிக்கும் வலிக்குமோ''

என்றும்...

''அம்மாவின் கைகளை அழுத்தினேன்
நீ எப்படி தாங்கினாய்
என்ற கேள்விக்குறியுடன்''

என்பதாக தன் தலைப்பிரசவத்தின் வலியின் உச்சம் அறிந்த பொழுதும் தன் மழலைக்கு வலிக்குமோ என்று கவலை... தாயும் இவ்வளவு வலி தாங்கியிருப்பார்களே என்று சேயாகப் பாசம்... தாய்மையின் தவிப்பு என பல்வேறு உணர்வுக்கலவைகளின் அணிவகுப்பு நெகிழ்வு தருகிறது...

நூலாசிரியர் ரித்து சூர்யா



''உள்நாக்கு ஒட்டிக்கொண்டு
உடல்வழி அமிலம்
என் குடல் திண்ணும்
கொடுர வழி தாங்க முடியவில்லை...''

ஏழ்மையின் இயலாமையை வலியை இதைவிட யாரால் உணர்ந்து உரைக்க முடியும் கூறுங்கள்..

காதலின் பல பரிணாமங்களான தீராக் காதல் வயப்படுதல், இன்பம்,சோதனை, தோல்வி,ஊடல்,கூடல்,மோகம்,வேகமென அனைத்து விதமான உணர்வுகளையும் உயிர்ப்பித்துக காட்டியிருக்கும் கவிதைகள் பலப்பல..இனிமையாய் நம்மை ஈர்க்கிறது.

சரிக்கும் தவறுக்கும் சண்டை மூட்டி மௌனத்திற்கும் சத்தத்திற்கும் நடுவில் நாட்டாமை செய்கிறாய்.. நீயின்றி நானில்லை .என மனசாட்சியிடம் பகிர்வது சிறப்பானதொன்று.

ஒவ்வொரு கவிதையின் இறுதியிலும் இடம் பெற்றுள்ள புகைப்படங்கள் கவிதையின் சாரத்தை உணர்த்தும் வகையில் தேர்ந்தெடுத்திருப்பது அழகு. ஆங்காங்கே ஓரிரு எழுத்துப்பிழைகள் தவிர்த்திருப்பின் நன்று.

முதல் படைப்பு என்றாலும் தான் சொல்ல வந்ததை எளிமையாக தெளிவாக அழுத்தமுடன் தனக்கென்ற தனித்தன்மையுடன் தாய்மை, காதல், சமூகச் சிந்தனை,ஏழ்மை,கிராமியம், தத்துவம் என அனுபவ முத்திரையுடன் பல்சுவை கூறும் நூலாசிரியர் ரித்துசூர்யா அவர்களின்"மனத் தூறல்கள்"' பூத்தூறல்களாய் அனைவரையும் நனைத்துச் செல்லும் என்பதில் ஐயமில்லை.

நூற்றிபத்து பக்கங்களுடன் வெளி வந்துள்ள "மனத் தூறல்கள்" நூலின் முழு உரிமையும் ஆசிரியருக்கே .. அளவு : 12x18 cm
விலை : 7 0 ரூபாய்

தொடர்புகளுக்கு : 90429 17115

# கற்றுத் தந்த தெய்வம்

**பா.சக்திவேல்**
கோயம்புத்தூர்.

பிறப்பால் அறியப்பட்ட தாய், தந்தையரை தெய்வமாக வணங்குவதில் பொருத்தம் உண்டு. கல்வியும், கலையும் கைவரச் செய்த ஆசிரியரும் ஆண்டவரும் ஒன்றா? நியாயமான கேள்விதான். நிதானமாக யோசித்தால் நிதர்சனங்கள் புரியும். பாறையாகக் கிடந்த கற்களை கிடத்தி கலையையும், ஒளியையும் பதித்து கோயில் சிலையாய் கருவறைக் கடவுளாக மாற்றி பலரையும் கையெடுத்து வணங்கச் செய்த சிற்பியாய், திசை தெரியாமல் திக்கற்று தள்ளாடும் மரக்கலனுக்கு நேசக்கரம் நீட்டி தன்னொளி பாய்ச்சி கரைசேர்க்கும் கலங்கரை விளக்கமாய், கரியாய் கவனிக்கப் படாமல் கிடந்தவர்களை தன் உழைப்பால் அவர்களுக்கு பல தளங்களை புறத்தே உருவாக்கி பளிச்சிடச் செய்து வைரங்களாய் வளர்த்து எடுக்கும் வாஞ்சை உள்ளவராய், எளிதில் ஏறி இறங்கும் ஏணியாய், ஆபத்தில் காப்பதில் தோணியாய், அறிவுப் பெருக்காலும், ஆற்றல் வீச்சாலும், அமைதிப் பேச்சாலும் ஞானியாய் விளங்கும் நல்லதோர் ஆசிரியப் பேரினமும் வணங்கத் தக்கதுதான்.

ஒரு நல்லாசிரியரின் தரம், அவரது அறிவு, நுட்பத்தைக் கொண்டு அளவிடப் படுவதில்லை, அவரிடம் பயின்ற மாணவர் களின் திறன், தற்போதைய நிலையை கருத்தில் கொண்டு அறியப்படுகிறது. அப்படிப்பட்ட ஆசிரியர்கள் உலகம் உள்ள ளவும் கொண்டாடப்பட்டுக் கொண்டேதான் இருப்பார்கள். இந்த ஆசிரியர்கள்தான் நாளைய உலகத்தை நளினமும், நவீனமும், நேர்மையும், அமைதியும் உள்ளதாக கட்டமைக்கும் ஆற்றல் படைத்த பிரம்மாக்கள்.

புவிச் சக்கரவர்த்திகளை விட கவிச் சக்கரவர்த்திகளே கலைவாணியின் அருளோடு பெருமை பெற்றவர்கள் என பல புலவர்களும் பல்வேறு காலங்களில் மொழிந்துள்ளனர். ஏனெனில் எவ்வகை முயற்சிகளாலும் அழிக்க முடியாத கல்விச் செல்வத்தை அள்ளி வழங்கும் அற்புதம் புரிபவர்கள் ஆசிரியர்கள் மட்டுமே. எதற்கும் உதவாத பிறவிகள் எனப் பெற்றோரே கைவிட்ட பிள்ளைகளைக் கூட ஆசிரியர் நினைத்தால் அகிலமே திரும்பிப் பார்க்கும் சாதனைகளுக்கு சொந்தக்காரர்களாக்க முடியும். ஆனால் புராண, வரலாற்று கால ஆசிரியர்களுக்கும் தற்கால ஆசிரியப் பணிக்கும் நிறைய வேறுபாடுகள் முளைக்கத் துவங்கி விட்டன. ஒரு காலத்தில் கல்வி, கேள்விகளில் திறம்பட விளங்க, நேர்மையான, தர்மம் சார்ந்த, வெற்றிகரமான வாழ்வை அமைத்துக் கொள்ள தேவையான பயிற்சி அளிக்கும் பணிக்காக ஆசிரியர் விளங்கினர். ஆனால் இப்பொழுது கல்வி பெரும்பான்மையாக தனியார் மயம் ஆகி விட்டது. வாடிக்கையாளர் சேவையாகப் பார்க்கப்படும் கல்வி போதித்தல் கலையிழந்து, தனித்தன்மையிழந்து போய்விடக் கூடாது. படிப்பு வெறும் பொருள் தேடுவதற்கானத் தகுதியாக சமீப காலமாகப் பார்க்கப்படுவதால் ஆசிரியர் - மாணவர் இடைவெளி அதிகரித்து வருகிறது.

ஏறி வந்த படிக்கட்டுகள் சிலர்

இறங்கி வருவதற்கும் பயன்படும். ஆனால் தம்மில் பயணிப்பவரை ஏற்றி விட்டு மட்டுமே அழகு பார்க்கும் அரிய பண்பு ஆசிரியர்க்கே உரியது. உலக வரலாற்றுப் பக்கங்களை சாதனைக் கரங்களால் புரட்டிப் போட்டவர்கள் தங்கள் ஆசிரியர்களை மதித்திப் போற்றி ஆராதனை செய்தவர்கள். சுடர்விடும் தீபத்தை தூண்டிவிட்டு இடர் வராமல் பாதுகாக்கும் ஆசிரியர்கள் மென்மேலும் தங்களை உயர்த்திக் கொண்டு வாழும் வழிகாட்டிகளாக வலம் வர வேண்டிய கட்டாயமும் எதிர்பார்ப்பும் மக்களிடம் நிறைந்துள்ளது.

முன்னுதாரணம் கொண்டு எதிலும் முயன்று பார்க்க வேண்டிய முக்கியப் பொருப்பு ஆசிரியர்களுக்கு இருப்பதாக ஆட்சியாளர்கள், நீதிபதிகள் உள்ளிட்ட அனைவரும் ஆசிரியச் சமூகத்தையே தங்களது நம்பிக்கை நட்சித்திரமாக வைத்துள்ளனர். எந்த ஒரு மனிதனும் ஒரு கட்டத்தில் ஏதோ ஒரு ஆசிரியரிடம் கல்வி பயின்றிருப்பான். ஆக காவல் துறைக்கு கடுமை காட்டும் குற்றவாளி கூட தனக்கு கற்றுக் கொடுத்த ஆசிரியரிடம் கனிவு காட்டுவார். “எழுத்தறிவித்தவன் இறைவன்” என்ற வரிகள் பொய்ப் பதில்லை. அதை உயிர்ப்போடு வைத்திருக்கும் வகையில் ஆசிரியர்கள் தன் நிலை அறிந்து செயல்படுகிறார்கள், தொடர்ந்து செயல்பட வேண்டும். வெறும் ஊதியத்திற்கான பணி ஆசிரியப் பணி அல்ல, அதையும் தாண்டி சமூகப் பொறுப்பாற்றும் பணி.

நல்லாசிரியர்கள் நிறைந்து நல்லதோர் கல்வி, கலை, ஞானம் பெற்று விட்டால் இந்த உலகம் சூது, பழி, வஞ்சகம், பொறாமை மறந்து அமைதிப் பூங்காவாக மலரும். அதில் காவலர்களும், நீதிபதிகளும் மலர் பறித்து மாலைதொடுக்கும்பணியை முன்னெடுப்பர். அதை நோக்கி பயணிப்போம்.

ஆசிரியரைப் போற்றுவோம். ஆசிரியர் களும் மாணவர்களாக தொடர்ந்து கற்றுக் கொண்டே இருப்போம். வாழிய செந்தமிழ்! ■



# கன்னியின் ஏக்கம்

சாயங்கால வேளையிலே
கண்முன்னே போரவரே
கன்னி பொன்னு நானிருக்கேன்
காணாம போலாமோ

பஞ்சாங்கம் பார்க்காம
பவிசாத்தான் போறவரே
பரிசம் ஒன்னு போடனும்னு
மனசுக்குள்ளே தோனலையோ

வயல் வரப்ப பார்த்து பார்த்து
வயசு கூடி போகுதுங்க
உமக்கு வாக்கப்பட்டு ஆக்கிப்போட
அடி மனசு ஏங்குதுங்க

ஆத்தாள கேட்டுப்புட்டு
அப்புறமா நீங்க வந்து
அத்தமவ என்னத்தான்
அள்ளிகிட்டு போயிடுங்க

பொடி நடையா போனாக்கா
பொறவாலே நானும் வரேன்
பொழுது சாயும் முன்னாலே
வீடுசேர வேணுமுங்க!!

**ஜீவா**
கோயம்புத்தூர்

# ஓடிஒளியட்டும் நரிக்கூட்டம்

எப்பொழுது பிறந்தாளோ யார்தான் சொல்வர்?
இப்போது பிறந்தவனா வயதைச் சொல்வான்?
தப்பாமல் தரணியாளும் தாயாம் காணீர்!
தப்பாகச் சொன்னாலும் நகைப்பாள் காணீர்
ஒப்பில்லா மொழியாக வளர்ந்தாள் அய்யா
ஓரெழுத்தால் உலகாளும் தாயாள் பொய்யா?
எப்போதும் தமிழ்த்தாயே மூத்தோள் ஆவாள்
இல்லையென்றுச் சொன்னாலும் சிரித்தே போவாள்!

சிறுபாறை மலைபார்த்து சினத்தற் போல
சிறுநரிகள் சிங்கத்தை முறைத்தற் போல
சிற்றோடை கடல்கண்டு நகைத்தற் போல
சிறுவரெலாம் முதியோரை இகழ்தற் போல
கற்றோரைக் கல்லாதான் எள்ளற் போல
காசுடையோன் இல்லானை தள்ளற் போல
முற்றுமுணர் ஞானிகளை அறியா மூடர்
முத்தமிழை சிறுகுழந்தை என்பர் நன்றோ?

எம்மொழியில் நம்மொழிப்போல் இலக்கணம் உண்டு?
எம்மொழியில் குடிமக்கள் இலக்கியம் உண்டு?
எம்மொழியில் குன்றாத இளமை உண்டு
எம்மொழியில் வற்றாத வளமை உண்டு
எம்மொழியில் திருக்குறள்போல் அறநூல் உண்டு?
எம்மொழியில் இறையழைக்கும் ஆற்றல் உண்டு?
எம்மொழிக்கு சரிநிகராய் எம்மொழி உண்டு?
எம்மொழியாம் தமிழ்மொழியே மணக்கும் செண்டு!

**இராம வேல்முருகன்**
வலங்கைமான்



# ராணி வந்துட்டா


பூபதி பெரியசாமி
புதுச்சேரி


நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்த மஞ்சுளா... ஆண்டாளின் விசும்பல் சத்தம் கேட்டு விழித்துக்கொண்டாள்.

“ஒன்னுக்குப் போயிருப்பாளோ... அதனால தான் அழுகிறாளோ...” என்று அவள் படுத்திருந்த இடத்தை தடவிப்பார்த்தாள். படுக்கையில் ஈரம் இல்லை. தூக்கி மடியில் கிடத்தி முதுகைத் தட்டிவிட்டாள்.

சிறிது நேரம் கழித்து மீண்டும் படுக்கையில் கிடத்திவிட்டு, அறையின் சன்னலைத் திறந்து வைத்தாள்.

அதிகாலைப் பொழுதில் அசைவற்று நின்றிருந்தன மரங்கள். முகம் திருப்பி படுக்கையில் அசைவற்றுக் கிடக்கும் மகளைப் பார்த்தாள். அருகே அமர்ந்து... மெதுவாகக் கையை அவள் கன்னத்தின் மீது வைத்தாள். சட்டெனக் கண்திறந்த ஆண்டாள், கைகால்களை அசைக்காமல், கூரை முகட்டை வெறித்துப் பார்த்து, விழிகளைச் சுற்றும் முற்றும் சுழற்றினாள். பெத்தவள் அருகே அமர்ந்திருப்பதை உணர்ந்து, ஆண்டாளின் கண் இமைகள் மீண்டும் மூடின.

பீறிட்டு வந்த அழுகையை அடக்கிக் கொண்டு, முகம் கழுவி வாசற்படியில் வந்து உட்கார்ந்தாள் மஞ்சு. அவள் கண்களில் சோகமும் வேதனையும் அப்பியிருந்தது.

பக்கத்து வீடுகளில் வெடிச்சத்தம் தொடர்ந்து கேட்டது. படுக்கை அறையின் வாசலில் நின்றிருந்த முகிலன், தயங்கித் தயங்கி மஞ்சுளாவின் அருகே வந்தான். அவன் ஏக்கம் அவளுக்குப் புரிந்தது.

தீபாவளின்னா எப்பவும் அஞ்சு மணிக்கு எந்திரிச்சி, எண்ணைக் குளியல் போட்டு, டான்னு ஆறடிக்க வெடியுடன் தெருவில் நிற்பது வழக்கம். ஆனால், கணவன் சிவராமன் இறந்து ஒரு ஆண்டு நிறைவு பெறாததால், இந்த தீபாவளிப் பண்டிகை துக்கநாளாகவே ஆனது.

இருவரும் சேர்ந்து ஆண்டாளின் தலையில் எண்ணெய் வச்சி உடலைச் சுத்தம் செய்தனர். பிறகு, தலைவாரி விட்டு ரிப்பன் கட்டிப் பூ வைத்து அவளுக்கு உடைமாற்றி மீண்டும் படுக்க வைத்தனர். பக்கத்து வீடுகளிலிருந்து தீபாவளிப் பலகாரம் வந்துகொண்டிருந்தது.

கணவருக்கு தீபாவளிப் படையல் ஏற்பாடு செய்து பூஜை அறையிலிருந்த இருந்த கணவனின் படத்தை வெறித்துப் பார்த்தாள். கண்கள் கலங்கினாள் மஞ்சு. சிவராமனின் நினைவுகள், அந்நேரம்

அவளுக்கு அதிகமானது.

படுத்த படுக்கையாய் அசைவற்றுக் கிடக்கும் ஆண்டாளைப் பார்த்துப் பார்த்து மனம் வெதும்பிக் குடிக்க ஆரம்பித்த, அவள் கணவன் சிவராமனைக் காலன் சுலபமாய் அழைத்துக் கொண்டான்.

தாலியை இழந்தாலும் தைரியத்தை இழக்காமல், தெரிந்த தையல் வேலை செய்து யாரிடமும் கையேந்தாமல் குடும்பத்தைச் சமாளித்து வந்தவளுக்கு அக்கம் பக்கத்தி லிருப்பவர்களும் துணிகளைத் தைக்க கொடுத்து உதவி வந்தனர்.

ஆண்டாள் பிறந்ததிலிருந்து, அவளுக்குத் தாயாய்... செவிலியாய்... உயிர்த்தோழியாய்... குருவாய்... பல அவதாரங்களை எடுத்தாள் மஞ்சுளா.

காலம்தான் எவ்வளவு வேகமாய் ஓடுகிறது. குனிந்து நிமிர்வதற்குள் எட்டு வருஷம் போயிடுச்சு.

வீட்டு வாசலில் யாரோ அழைக்கும் சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்தாள் மஞ்சுளா. அவள் பள்ளித்தோழி அம்பிகா நின்றிருந்தாள். ஆச்சர்யத்துடன் அவளை உள்ளே அழைத்துச் சென்றாள். தோழி கொண்டுவந்த பலகாரங்களையும் புதுத் துணையையும் வாங்கி வைத்துவிட்டு நாற்காலியை எடுத்து வந்து ஆண்டள் படுத்திருந்த படுக்கையின் அருகே போட்டாள்.

“உட்காருடி; எப்படி இருக்கே. என் வீடு உனக்கு எப்படித் தெரியும்; தீபாவளி அதுவுமா... இவ்வளவு தூரம் என்னைத்தேடி வந்திருக்கே. சந்தோஷமா இருக்குடி...”

“போனவாரம் “சாமான்ய மனிதர்கள்” என்ற தலைப்பில், ஒரு தொலைக்காட்சியில் உன்பேட்டியப்பார்த்தேன்.இவ்வளவுசின்ன வயசுல கணவரையும் இழந்து, ஆண்டாளை வச்சிக்கிட்டு கஷ்டப்படறேன்னு தெரிஞ்சதும், மனசுக்குக் கவலையா இருந்தது. அதான் உன்னைப் பார்த்து ஆறுதலா பேசிட்டுப் போகலாம்னு...”

நீண்ட நாட்களுக்குப் பிறகு தோழியைப் பார்த்தவள், மகிழ்வாய் அவள் வார்த்தைகளைக் காது கொடுத்துக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

“ஒருத்தரோட வாழ்க்கை வெற்றி என்பது.... ஒரு வயசுல யாரோட துணையில்லாம நிற்பது, நாலு வயசுல படுக்கையில் சிறுநீர் கழிக்காம இருப்பது, எட்டு வயசுல வீட்டிற்கு வழி தெரிவது...மொத்தத்துல பிறர் துணையில்லாம இருப்பது. ஆனா, ஆண்டாளுக்கு எல்லாமே பிறர் துணையோடதான் நடக்குது. இன்னும் நாளாக நாளாக உனக்கு பாரமாத் தெரியவரும் மஞ்சு...”

“மரத்துக்கு பழம் பாரமாவாத் தெரியும்..? அதெல்லாம் ஒரு கஷ்டமும் இல்ல. நான் மகிழ்ச்சியாத்தான் இருக்கேன்டி....” கலங்கிய

# மீதி கதை

மொட்டை மாடியில் படுத்து மகனுக்கு
கதை சொல்லும்போதெல்லாம்
என் கதைக்கேட்டு மெய்மறந்து
மகன் தூங்கிவிட அது தெரியாமல்
கதையை தொடர்ந்து சொல்ல...
என் கதையைக் கேட்டு இலயித்துத்
தலையாட்டிக் கொண்டிருக்கும்
பனையைப் பார்த்தபடி நான்
தூங்கிவிடுவேன்.

அதேபோல நேற்றிரவும் ஒரு
அற்புதமான கதையை மகனுக்கு
சொல்லிக் கொண்டிருக்கும்போதே
மகன் தூங்கிவிட்டதை அறிந்த நான்.!
பாதியோடு நிறுத்திவிட்டேன்.

நெடுநேரமாகியும் எனக்கு
தூக்கமும் வரவில்லை
மீதி கதையைக் கேட்க
பனையும் தற்போது இல்லை.

**ச.ப.சண்முகம்**
எழுவாம்பாடி.

கண்களைத் துடைத்தபடி சொன்னாள் மஞ்சுளா.

சிறிது நேரம் கழித்து, தான் சொல்ல வந்ததை தயங்கித் தயங்கிச் சொல்லத் தொடங்கினாள் அம்பிகா.

“எதையும் அனுபவிக்காத வாழ்க்கை என்னடி வாழ்க்கை. வாழ்க்கையில நாம எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்கு ‘தீர்வு’ மனப்பக்குவம்தான். கொஞ்சம் மனச திடப் படுத்திக்கிட்டு நான் சொல்றதக் கேளு மஞ்சு...” திடீரெனப் பீடிகையெல்லாம் போட்டுப் பேசினாள் தோழி அம்பிகா.

“இப்போ நான் உன் நெருங்கிய தோழியா பேசல. ஒரு வக்கீலா பேசறேன். படுத்த படுக்கையா எந்த ஒரு சுகத்தையும் அனுபவிக்காமதுன்பப்படறஜீவன்களுக்குத் தருகிற சிகிச்சை முறைதான் “பேசிங்க் எத்னேசியா. இதுவும் ஒருவகையான மருத்துவ சிகிச்சைதான் மஞ்சு...”

வார்த்தையின் மொழி புதிதாக இருந்த தால் ஒன்றும் புரியாமல் குழம்பினாள் மஞ்சு. புரிந்துகொண்ட தோழி நிதானமாய் எடுத்துச் சொன்னாள்.

“குணப்படுத்தவே முடியாத வியாதியால, தீவிரமா பாதிக்கப்பட்டுக் கஷ்டப்படற நோயாளி களை, அவர்களின் நெருங்கிய உறவுகளின் வேண்டுகோளுக்கினங்க துன்பம் இல்லாம....”

“துன்பம் இல்லாம... சொல்லுடி...துன்பம் இல்லாம இருக்க... என்ன செய்யனும்...” பதறினாள் மஞ்சுளா.

சில நிமிடங்கள் அமைதியாய் இருந்த அம்பிகா... தயங்கியபடியே தொடர்ந்தாள். “ஆமாண்டி மஞ்சு. வேற வழியில்ல. “கருணைக் கொலை”க்கு கோர்ட்டை அனுகிடலாம். உச்ச நீதி மன்றமே சில தீர்ப்புகள வழங்கியிருக்கு. நீ சரின்னு மட்டும் ஒரு வார்த்த சொல்லு. மத்தத நான் பாத்துக்கறேன்...”

அடுத்த கனமே மஞ்சுவுக்கு கண்கள்



# கல்வி இன்று கடைத்தெருவில்

கல்விக்கூடங்களை சில
கயமைக் குணத்தினர்
கலவிக்கூடங்களாகியது அவலம்
பள்ளி அறைகள் சில
பண்பற்ற மாக்களால்
பள்ளியறை ஆனதொரு அவலம்
அரும்பெரும் கல்வியாளர்கள்
ஆளுமையை நீக்கி அங்கு
அரசியலார் புகுந்ததொரு அவலம் .
கள்ளுண்டு போதையோடு
பள்ளிக்குள் வந்து ஆசிரியர்
பாடம்நடத்திடும் ஓர் அவலம்
பள்ளிக் கட்டணமென்று
கொள்ளையடிக்கும் கூட்டம்
பள்ளிகள் நடத்துகின்ற அவலம் .
மதிப்பெண்ணே குறியென்று
மாணவரை மழுங்கடிக்கும்
மதிகெட்ட கூட்டமொரு அவலம்
அத்தனையும் தெரிந்திருந்தும்
அக்கிரமம் களையாமல் அரசாங்கம்
இருக்குமொரு அவலம்
கடைநிலையில் உள்ளவரையும்
கடைத்தேற்றும் கல்வி இன்று
கடைத்தெருவில் நிற்பது பெரும் அவலம்.

**சிலேடை சித்தர்**
**சேது சுப்ரமணியம்**

இருட்டிக்கொண்டு வந்தது; காது அடைத்தது; தலைசுற்றி மயக்கம் வருவதுபோல இருந்தது.

“மஞ்சு..., ஒரு உயிரைக் கொல்றத நான் நியாயப்படுத்தல. அதுக்கு நிறைய நடைமுறை இருக்கு. மொதல்ல மருத்தவர்கள் நமக்கு சாதகமா அறிக்கை தரணும். அப்புறம் நீதிமன்றத்த அனுகி, சட்டத்தின் துணையோடுதான் முறையா செய்யமுடியும். முயற்சிக்கலாம்னுதான் சொல்றேன்...” என்று தோழி சொல்லிக் கொண்டிருக்கும்போதே....

வெளியே காற்று வேகமாக வீசத் தொடங்கியது.லேசாகப்பெய்யத்தொடங்கிய மழையின் இயல்பை அறிந்துகொள்ள, ஜன்னலுக்கு வெளியே கையை நீட்டினாள் மஞ்சு. உள்ளங்கையில் மழைத்துளி ஒன்று வந்து விழுந்தது.

“இதோபார் மஞ்சு... கீழே விழும் இந்த மழைத்துளி போலத்தான் மனித வாழ்க்கையும். ஒவ்வொரு துளியும் கடலில் கலந்து நித்யமாகிவிடும் அல்லது மண்ணில் விழுந்து உறிஞ்சப்படும். மனித மரணத்தை நாசூக்காகச் சொல்லித்தருது இந்த மழை...”

முடிவெடுக்க ஒருமாதம் அவகாசம் கொடுத்து, தோழி விடைபெற்றுச் சென்ற பின், முகிலனைத் தேடினாள் மஞ்சு. கட்டிலில் படுத்திருந்த ஆண்டாளை இறுகத் தழுவியபடி இருந்த முகிலனின் கண்கள் கலங்கியிருந்தது.

அருகே சென்று, அவன் தலையைக் கோதிவிட்டாள் மஞ்சு. நிமிர்ந்த முகிலன் கண்களைத் துடைத்தபடி... “அம்மா... நானும் அக்காமாதிரி பொறந்திருந்தா... என்னையும் கொன்னுடுவிங்களா...” என்றான் பயந்தபடி.

அவன் வார்த்தையில் ஆடிப்போய் அழுகையை அடக்க முடியாமல், முகத்தை மூடியபடி விக்கி விக்கி அழுதாள். முகிலனை வாரியணைத்து முத்தமிட முயற்சித்தாள். ஆனால் அவன் பயத்தில் விலகி ஓடினான். மனக்குமுறலுடன் பூஜையறைக்குள் சென்ற அழுது தீர்த்தாள் மஞ்சு.

தோழி வீட்டிற்கு வந்து சென்ற பிறகு... அவள் மனசு தெளிவாக இல்லை. சில நாட்களாகவே குழப்பங்களைப் பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

ஒருவாரம் கடந்தது... முகிலனின் பள்ளித் தலைமையாசிரியையிடம் இருந்து, ‘உடனே சந்திக்க வருமாறு’ அழைப்புக் கடிதம் ஒன்று வந்தது. பக்கத்து வீட்டுப் பாட்டியிடம் ஆண்டாளை கவனிக்கச் சொல்லிவிட்டு, பதறியபடி பள்ளிக்குச் சென்றாள் மஞ்சு.

ஒருமணி நேரத்தில்... தலைமை ஆசிரியை



## கண்ணியம் காத்திடு பெண்ணே

நேரிசை ஆசிரியப் பா

சாதனை செய்வாய் சரித்திரம் படைப்பாய்
வேதனை வேண்டாம் வெற்றி பெறுவாய்
சோதனை தாண்டி சொர்க்கம் நிறுவு
போதனை செய்தே போக வேண்டா
வேடிக்கை செய்வர் வென்று காட்டு

கோடி கொடுப்பினும் கொள்கை விடாதே
இன்றும் நேற்றும் இனிய நாளென
என்றும் நீயே எடுத்து வைத்த
உனது அடிகள் உனக்கென
மனதுவை என்றும் மகளே நீயே!

**- தமிழ்நெஞ்சம் அமின்**

யின் அறை வெளியே “என்ன நடக்குமோ…” என்ற அச்சத்தில் ஏற்பட்ட உடல் நடுக்கத்தை வெளியே காட்டாமல் காத்திருந்தாள். சிறிது நேரத்தில் அழைப்பு வந்தது. அவர் எதிரில் இருந்த நாற்காலியின் முனையில் உட்கார்ந்திருந்த மஞ்சுவைக் கையெடுத்து வணங்கிக் கனிவாய்ச் சிரித்தார் தலைமை ஆசிரியை.

“படிச்சவங்க மாதிரி இருக்கீங்க. இப்படி ஒரு முட்டாள் தனமான காரியம் செய்ய உங்களுக்கு எப்படி மனசு வந்தது…” என்று எடுத்த எடுப்பிலேயே வேகமாய் பேசத்தொடங்கினார் அவர்.

“மேடம்.. நீங்க என்ன சொல்றீங்கன்னு எனக்குப் புரியல. என் மகன் ஏதாவது….” பேசிக்கொண்டிருக்கும்போதே, தோளில் யாரோ கைவைப்பதை உணர்ந்து நிமிர்ந்தாள் மஞ்சுளா. முகிலனின் வகுப்பாசிரியை நின்றிருந்தார்.

“நல்லாப் படிச்சிட்டிருந்த முகிலன், கடந்த சில நாட்களாவே வகுப்பறையில எதையோ பறிகொடுத்ததுபோல இருக்கான். யாரிடமும் பேசறதில்ல. தனிமையிலயே இருக்கான். விசாரித்த பிறகுதான் எங்களுக்குக் காரணம் தெரியவந்தது…”

எதுவும் பேச முடியாமல் அமைதியாய் அமர்ந்திருந்தாள் மஞ்சுளா.

“ஒவ்வொரு குடும்பத்திலும்… ஒவ்வொரு மனிதனுக்கும் பிரச்சனைகள் இருக்கும். பிரச்சனை இல்லாத மனிதர்களே இல்லை. சகிப்புத்தன்மையும், பொறுமையும் இருந்துட்டா எல்லாமே சரியாயிடும்…” பேசிக்கொண்டே சில போட்டோக்களை எடுத்து மேசை மீது போட்டார் தலைமை ஆசிரியை.

கை நடுக்கத்தோடு போட்டோக்களை எடுத்துப் பார்த்தாள். ஐம்பது வயதைக் கடந்த ஒருவர் படுத்தபடுக்கையாய் சிரித்த முகத்தோடு விதவிதமான ஆடைகளை உடுத்திய நிலையில் இருந்தார். அவர் அருகில் புன்சிரிப்போடு தலைமை ஆசிரியை நின்றிருந்தார். ஒன்றும் விளங்காததால், மஞ்சுளாவின் முகம் மாறியதைப் புரிந்துகொண்டு தலைமை ஆசிரியை பேசத்தொடங்கினாள்.

“அவரு வேற யாருமில்ல. என் கணவர்தான். பல்கலைக் கழகப் பேராசிரியா இருந்தார். இருபது வருஷத்துக்கு முன், இருசக்கர வாகனத்துல வேலையிலிருந்து திரும்பிவரும்போது, ‘சரியா பராமரிக்கப்படாம இருந்த வேகத்தடை’யால தூக்கி எறியப்பட்டு முதுகுத்தண்டு பாதிப்படைந்து உடல் உறுப்புகள் செயலிழந்துபோச்சு. அதுல இருந்து எல்லாமே படுக்கையிலதான். தினமும் அவருக்குத் தேவையானது எல்லாமும் நானே செய்யறேன். வேலை நேரம் போக மீதிநேரம் முழுதும் அவரோடதான். குழந்தையில்லாக் குறையே எனக்கு இல்ல. ஏன்னா… அவரையே ஒரு குழந்தைபோலப் பார்த்துக்கறேன். பண்டிகைக்கு புத்தாடை உடுத்தி அழகு பார்ப்பேன். அவரும் சிரிச்ச முகத்தோட பார்ப்பார். அப்போ எடுத்த புகைப்படங்கள்தான் இதெல்லாம்…”

மஞ்சுவின் உடல் நடுக்கம் குறைந்து. கலங்கியிருந்த கண்களைத் துடைத்தாள்… “மொதல்ல அழறத நிறுத்துங்கம்மா. குறிப்பா உங்க பொண்ணுகிட்ட; சிரிச்ச முகத்தோட அவளுக்கு சேவை செய்யுங்க. பல வலிகளைத் தாங்கிப் படுத்திருக்கும் அவகிட்ட உங்க வலியை வெளிக்காட்டாதீங்க. ‘கருணை’தான் எல்லாவற்றிலும் உயர்ந்ததுன்னு பட்டினத்தாரே சொல்லியிருக்கார்…”

பேசி முடித்ததும் அதை ஆமோதிப்பது போல ‘மணி’ ஒலித்தது. எதிரில் இருந்த கடிகாரம் 4.15 மணியைக் காட்டிக்கொண்டிருந்தது. பள்ளி முடிந்து பிள்ளைகள் வீட்டுக்குப் புறப்பட்டனர்.

மனுஷனுக்கு ‘வாழ்க்கை’ சொல்லிக் கொடுப்பதைவிட சில ‘வார்த்தைகள்’ சொல்லித்தருவது அதிகம். இருவருக்கும் நன்றி சொல்லிவிட்டு, முகிலனை அழைத்துக் கொண்டு ஓட்டமும் நடையுமாய் வீடு திரும்பினாள் மஞ்சு. உள்ளே நுழைந்ததும்

முதல் வேலையாய்... செல்போனை எடுத்தாள்.

தோழி அம்பிகா எண்ணிற்கு... "ஒரு தாயின் புன்னகையும் கருணையும்தான்... பிள்ளைகளை ஒவ்வொரு நிலையிலும் எழச்செய்கிறது. அன்புதான் அத்தனைக்கும் ஆணிவேர்... உன் ஆலோசனைக்கு நன்றி...." என்ற குறுஞ்செய்தியை அனுப்பினாள்.

வீட்டு முற்றத்தில் மாலை வெயில் அடித்தது. அந்தப் பொன்னொளியில் மஞ்சள் பூசிய சிரித்த முகத்துடன் புத்தாடை உடுத்தி மங்களமாய் இருந்தாள் ஆண்டாள்.

"என் அக்கா மகாலட்சுமி மாதிரி இருக்கா. அம்மா... நம்ம வீட்டுக்கு 'ராணி வந்துட்டா'..." என்று ஆண்டாளை இறுக அணைத்தபடி... மகிழ்ச்சியில் தன்னை மறந்து கத்தினான் முகிலன்.

படிக்கட்டுக்குப் பக்கவாட்டிலிருந்த தொட்டியில்... ரோஜாச்செடி புதுபுதுவென துளிர்விட்டு, அழகாய் மொட்டுகள் விட்டிருந்தது. ஆசையாய் அதைக் கையால் தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தாள் மஞ்சுளா.

■

# எல்லோரும் வெல்வோம்

( எண்சீர் விருத்தம் - காய் காய் மா தேமா )

முயற்சியொன்றே மூலதன மாகக் கொண்டு
முடிந்தவரைப் போராடு வெற்றி காண ..!
பயிற்சிகளை முறைப்படியாய் பெற்று நீயும்
பாடுபடு வெற்றியென்றும் உன்னைச் சேரும்...!
அயராம லுழைத்தாலே அல்லும் பகலும்
ஆண்டவனும் எப்போதும் துணையி ருப்பான் ...!
துயரங்கள் ஓடிடநாம் துரத்திச் செல்வோம்
துணிவாகப் பயணித்து நாளும் வெல்வோம்...!

ஒற்றுமையாய்ச், செயல்படுவாய் கரம்நீ பற்றி
ஓயாமல் நீநடந்தால் உறுதி வெற்றி...!
பற்றோடும் பணிவோடும் இலக்கைத் தொடுவோம்
பாங்குடனே உழைத்துநாமும் வெற்றி கொள்வோம்...!
சிற்றெண்ணம் கொள்ளாமல் சிறப்பாய் வாழச்
சீரான முயற்சியினைக் கொள்வோம். வாழ்வில்...!
வற்றாத வளமெல்லாம் வாய்க்கப் பெற்று
வாழ்வினிலே எல்லோரும் வெல்வோம் வாரீர்.!

**ஜோதிபாஸ் முனியப்பன்**

- கற்பக சுந்தரம்
தமிழகம்

# தமிழரின் வாழ்வில் சினிமாவின் தாக்கம்

சமீபத்தில், என் நண்பர் ஒருவர் மரணமடைந்தார். தற்கொலை. அப்படித்தான் சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால் எனக்கு அது இந்த சமூகம் நிகழ்த்தும் கொலையாக எண்ண தோன்றுகிறது.

ஏனெனில், அவர் காதல் தோல்வியில் மரணம் அடைந்திருக்கிறார். எனக்கு ஒன்று மட்டும் புரியவில்லை. காதல் எப்படி தோற்கும்? காதல் என்ன பந்தயமா? வெற்றி, தோல்வி என யார், எது, எப்படி நிர்ணயம் செய்கிறார்கள்? காதல் திருமணத்தில் முடிந்தால் வெற்றி, இல்லையென்றால் தோல்வி. இது தான் சமூகம் நமக்கு கற்றுக் கொடுக்கும் வழிமுறை.

ஆனால் காதல் என்பதே ஒருவரை ஒருவர் புரிந்துக் கொள்ள இயற்கையாக உடலில் ஏற்படும் மாற்றங்களுடன் பழகிக் கொள்வது மட்டுமே. நட்புக்கும் காதலுக்கும் சிறிய வேறுபாடு தான். நட்பு, சக மனிதரை புரிந்துக் கொள்ள உதவி செய்யும். காதல், உங்களில் ஒருவரை புரிந்துக் கொள்ள உதவி செய்யும். இதுதான் எனது புரிதல்.

அப்படியென்றால், காதலானது ஒருவரை புரிந்துக் கொள்ள உதவி செய்வதோடு அதன் பணியை முடித்துக் கொள்கிறது. அந்த இருவருக்கும் சரியான புரிதல் இருப்பின் வாழ் நாள் முழுவதும் சேர்ந்து வாழ முயற்சிக்கின்றனர். புரிதல் சரியாக இல்லையென்றால் பிரிந்து விடுகின்றனர். இதுதானே நியாயமாக இருக்க வேண்டும்.

பின் எந்த நிலையில் காதலிற்கு வெற்றி தோல்வி நிர்ணயிக்கப்படுகிறது? ஒருவனுக்கு ஒருத்தி என்பது இயற்கையின் நிலைப்பாடு அல்ல எனும் பொழுது மனிதனாக உருவாக்கி வைத்துக் கொள்ளும் வாழ்வியலானது எப்படி இயற்கையுடன் இயந்து போவதாக இருக்கும்? நாம் இயற்கையின் படைப்பு எனும் பொழுது நாம் இயற்கைக்கு கட்டுப்பட வேண்டுமே ஒழிய செயற்கைக்கு ஏன் கட்டுப்பட வேண்டும்? நமக்கு அளிக்கப்பட்டிருக்கும் பகுத்தறிவின் மூலம் நமக்கு சரியான இணையை காதல் செய்வதன் மூலம் தேர்ந்தெடுத்துக் கொள்வதே சரியான முடிவாக இருக்கும் என கருதுகிறேன். ஆனால் சமூகமானது எனது கருத்திற்கு மாறான கருத்தை வழங்குகிறது.

ஒருவரை மட்டுமே காதலிக்க வேண்டும் அவரை திருமணம் செய்துக் கொள்ள வேண்டும் என்ற கருத்தை திணிப்பதன் மூலம் தமிழர் வாழ்வியலில் உள்ள பெற்றோரால் நிச்சயிக்கப்படும் திருமணத்தை பாதுகாக்க முயற்சிக்கிறது. அவர்களின் பார்வையில் பாதுகாப்பு என்பது, பெண் / ஆண் திருமணத்திற்கு முன்பான உடலுறவில் ஈடுபட்டிருக்க கூடாது. காதலித்தால்

உடலுறவு கொள்ள வாய்ப்பு இருப்பதால் காதலித்த நபரை திருமணம் செய்துக் கொள்ள நிர்பந்திக்கிறது. அதன் மூலம் காதலிக்காத நபர்களே திருமண சந்தையில் கிடைப்பார்கள்.

எனவே, பெற்றோர் நிச்சயித்த திருமணத்தில் ஒழுக்கமான நபர்களே கிடைப்பார்கள் என்ற பிம்பத்தை உருவாக்க சமூகம் முனைகிறது. இதன் மூலம், ஜாதி, மத கட்டமைப்புகளை உடையாமல் பாதுகாத்துக் கொள்ள திருமணத்தை ஒரு ஆயுதமாக பயன்படுத்துகிறது.

இதற்கு சினிமா முக்கிய பங்கு வகிக்கிறது. சினிமாவின் மூலம் காதலின் வெற்றி என்பது திருமணம் தான் என திரும்ப திரும்ப கருத்தியல் உருவாக்கப்பட்டு பரப்பப்படுகிறது. சினிமாவினூடே வாழ்ந்த அப்பாவி தமிழர்கள் இயற்கையாக நிகழும் காதல் கடந்து சென்று விட்ட பிறகு அது தோல்வி அடைவதாக கருதுகின்றனர். அது பெரிய சோகத்தை உருவாக்கி தருகிறது.

காதலின் வெற்றி திருமணம் என்றே ஆழமாக பதிந்து போன கருத்தியலிலிருந்து மனம் வெளியேற முடியாமல் கடுமையான அழுத்தத்தை உருவாக்குகிறது. மேலும், சமூகத்தில் அவமானத்தையும் நிராகரிப்பையும் ஏற்படுத்துகிறது. அதனால் தற்கொலைக்கான வழி பிறக்கிறது. எனவே, இந்த சமூகம் தான் மனிதனை தற்கொலைக்கு தள்ளுகிறது என புரிந்துக் கொள்ள முடிகிறது.

நண்பர் ஒருவர் சொன்னார், காதல் தோல்வியை கடந்து வந்தவனால் வாழ்வின் பெரும் துயரங்களையும் கடந்து வந்துவிட முடியும் என்கிறார். அப்படியான பெரும் துன்பத்தை காதல் அளிக்கிறது என்பது புரிந்துக் கொள்ள முடிகிறது. சமூகமானது சினிமாவை எப்படி தனது கருத்தியலை பரப்பும் சாதனமாக கையாள்கிறது என ஆய்வு செய்தால் நமக்கு பல அதிர்ச்சிகள் காத்திருக்கின்றன.

உதாரணமாக, காதலர் தேசம் படத்தை எடுத்துக் கொள்ளலாம். அந்த படத்தின் நாயகன் – நாயகியின் காதலானது நிலைப்பதற்கு யதார்த்தத்தில் வாய்ப்புகள் மிகவும் குறைந்த்தாக இருக்கிறது. ஆனால் இறுதியில் அந்த காதல் வெற்றி பெற்றதாக இருக்கும். இந்தியாவின் பிரபலமான கல்வி நிறுவனத்தின் நிறுவனர் அவர் மகளை ஏழை மாணவருக்கு திருமணம் செய்துக் கொடுப்பது என்பது யதார்த்தமானதா என யோசித்தால் வாய்ப்புகள் மிக குறைவாக இருக்கின்றன. இப்படியான பல காதல்கள் நிலைக்காமல் முடிந்துவிடுகிற பொழுது சினிமாவின் காதல் வெற்றி என்பது பார்வையாளனின் காதல் வெற்றியாக கருத வாய்ப்புகள் இருக்கின்றன.

இந்த யுக்தியானது, பெண்ணியவாதி யான லாரா மல்வே முன்மொழிகிறார். அவர், ஒரு பிரமாண்டமான இருட்டு அறையில் பார்வையாளன் கண் முன்பே விரியும் திரை பிம்பத்தை அவன் உண்மையானதாக கற்பனை செய்து கொள்வதுடன் சினிமா கதாப்பாத்திரமாக மாறி விடுகிறான் என்கிறார். காதலர் தேசம் படத்தை தனது காதலுடன் ஒப்பிட்டு பார்க்கும் பார்வையாளன் சினிமாவின் காதலானது திருமணத்தில் முடிந்ததால் தனது காதலும் திருமணத்தில் முடிய வேண்டும் என நினைப்பதாக நான் முடிவுக்கு வருகிறேன். இவ்வாறாக காதலானது திருமணத்தில் முடிந்தால் தான் வெற்றி என்ற கருத்தியலை பார்வையாளனுக்கு உருவாக்கும் சினிமாக் கள் நிறைய இருக்கின்றன.

உதாரணமாக,

2001 ஆம் ஆண்டு வந்த 'தீனா' திரைப்படத்தில், நாயகி ஓவிய மாணவியாக இருப்பார், எனவே, நாயகனிடம் அவர்கள் திருமணம் முடிந்து, பிள்ளை பெற்று, பிள்ளைக்கு திருமணம் முடிந்து, பேர குழந்தைகளுடன் இருக்கும் வரையிலான ஓவியங்களை கற்பனை செய்து ஓவியமாக வரைந்து காட்டுகிறார்.

2002 ஆம் ஆண்டு வெளிவந்த 'ஜெமினி' திரைப்படத்தில் நாயகனுடன் காதல்

ஏற்பட்டு நாயகி காதலிக்க துவங்கும் பொழுது அவன் ரவுடி என உண்மை தெரிய வருகிறது. எனவே, துன்பத்தால் இருவரும் கஷ்டப்படும் பொழுது போலீஸ் கமிஷனராக இருக்கும் சமூகத்தின் பெரிய மனிதர் இருவரின் திருமணத்திற்கு நாயகியின் பெற்றோரிடம் சம்மதம் வாங்குகிறார்.

2003 ஆம் ஆண்டு வெளிவந்த ‘சாமி’ திரைப்படத்தில் நாயகனுடன் காதல் ஏற்பட்ட நாயகி திருமணம் செய்துக் கொள்ள முடிவு எடுக்கிறார். திருமணத்தை முன்வைத்த காட்சிகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கும்.

2004 ஆம் ஆண்டு வெளிவந்த ‘கில்லி’ திரைப்படத்தில், நாயகியின் விருப்பம் இல்லாமல் நடைபெறா இருந்த திருமணத்திலிருந்து நாயகியை மீட்ட நாயகனையே திருமணம் செய்துக் கொள்ள காதலிப்பதாக கதை அமைக்கப்பட்டிருக்கும்.

2005 ஆம் ஆண்டு வெளிவந்த ’சந்திரமுகி’ திரைப்படத்தில் துணை நாயகன் காதலித்த பெண்ணை திருமணம் செய்துக் கொள்வதாகவும், ஒரு துணை நடிகை காதலித்த நபரை திருமணம் செய்து வைக்க நாயகன் முயற்சி எடுத்து அதில் வெற்றியும் பெறுவார். மேலும், இறுதியில் நாயகியை திருமணம் செய்து அழைத்து செல்வார்.

2006 ஆம் ஆண்டு வெளிவந்த ‘வேட்டையாடு விளையாடு’ எனும் திரைப்படத்தில் நாயகியை பார்த்த சில மணி நேரத்திலேயே திருமணம் செய்துக் கொள்ள அனுமதி கேட்பார். அவரை திருமணமும் செய்துக் கொள்வார். பின், நாயகியின் மறைவை தொடர்ந்து வேறு நாயகியை காதலித்து திருமணம் செய்துக் கொள்வார்.

2007 ஆம் ஆண்டு வெளிவந்த ‘சிவாஜி’ திரைப்படத்தில் நாயகியின் மீது பார்த்ததும் காதலில்(?) விழும் நாயகன் அவரை திருமணம் செய்துக் கொள்ள இந்திய அரசியலமைப்பு சட்டத்திற்கு எதிரான அத்தனை செயல்களையும் செய்வார். பின் திருமணம் நடந்து விடும்.

2008 ஆம் ஆண்டு வெளிவந்த ”யாரடி நீ மோகினி’ திரைப்படத்தில் நாயகன் ஒருதலையாக காதலிக்கும் பெண்ணை நாயகனின் நண்பன் திருமணம் செய்ய இருப்பார். பின் நாயகன் மீது நாயகிக்கு காதல் வந்துவிடும். எனவே, இறுதியில் நாயகனை நாயகி திருமணம் செய்வதாக படம் இருக்கும்.

2009 ஆம் ஆண்டு வெளிவந்த ’அயன்‘ திரைப்படத்தில் காதல் செய்யும் நாயகன் மற்றும் நாயகி திருமணத்திற்கு பிந்தைய வாழ்க்கை முறையை பற்றி பேசிக் கொள்கின்றனர். அதில் மாமியார்-மருமகள் பிரச்சனைகள் வரை பேச்சுகள் இருக்கின்றன.

2010 ஆம் ஆண்டு எந்திரன் திரைப் படத்தில் காதல் செய்துக் கொள்ளும் மனிதர்கள் தாண்டி இயந்திரமும் பெண்ணை திருமணம் செய்துக் கொள்ள மனிதர்களுடன் போராடுவதாக காட்சிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

2011 ஆம் ஆண்டு வெளிவந்த ‘மயக்கம் என்ன’ திரைப்படத்தில் நாயகன் காதலிக்கும் பெண்ணையே திருமணம் செய்துக் கொள்வார். பின் அவருக்கு மன நலம் சரி இல்லாமல் போய் விடும். அவரை காப்பாற்றி வெற்றி பெற்றவராக மாற்றுவார் நாயகி.

2012 ஆம் ஆண்டு வெளிவந்த ‘துப்பாக்கி திரைப்படத்தில் நாயகியை முதலில் நாயகன் பெண் பார்க்க வருவதாக காட்சிகள் அமைக்கப்பட்டிருக்கும். அதில் நாயகன் எதிர்பார்ப்பது போன்று காட்சி இருக்கும். மேலும், நாயகி அவருடைய நண்பர் திருமணத்தில் பணத்திற்கு தான் திருமணம் என்று கருத்தியலில் உறுதியாகி அழகும் வீரமும் செல்வமும் இருக்கும் நாயகனை திருமணம் செய்து கொள்ள முடிவெடுப்பதாக கதை அமைக்கப்பட்டிருக்கும்.

2013 ஆம் ஆண்டு வெளிவந்த ’சிங்கம் 2’ திரைப்படத்தில் காதலித்த நாயகன் மற்றும் நாயகி இருவரும் திருமணம் செய்துக் கொள்வதாக காட்சிகள் அமைக்கப்பட்டிருக்கும்.

2014 ஆம் ஆண்டு வெளிவந்த 'லிங்கா திரைப்படத்தில் நாயகன் மீது ஏற்பட்ட புரிதலுடன் நாயகி நாயகனை திருமணம் செய்துக் கொள்வதாக காட்சிகள் இருக்கும்.

2015 ஆம் ஆண்டு வெளிவந்த 'ஐ' திரைப்படத்தில் நாயகனுகடன் ஏற்பட்ட காதலால் இறுதியில் திருமணம் செய்துக் கொள்வதாக காட்சிகள் அமைக்கப் பட்டிருக்கும்.

2016 ஆம் ஆண்டு வெளிவந்த 'தெறி' திரைப்படத்தில், நாயகன் மற்றும் நாயகி இருவரும் காதலித்து திருமணம் செய்துக் கொள்வார்கள்.

2017 ஆம் ஆண்டு வெளிவந்த 'மெர்சல்' திரைப்படத்தில் காதல் செய்யும் நாயகன் மற்றும் நாயகி இருவரும் நிச்சயதார்த்தம் செய்துக் கொள்வதாக காட்சிகள் அமைக்கப் பட்டிருக்கும்.

2018 ஆம் ஆண்டு வெளிவந்த 'கடைக்குட்டி சிங்கம்' திரைப்படத்தில் காதலித்த நாயகன் மற்றும் நாயகி இருவரும் பலகட்ட எதிர்ப்புகளுக்கு பிறகு இறுதியில் திருமணம் செய்துக் கொள்வார்கள்.

மேற்கண்ட படங்கள் எல்லாம் 21 ம் நூற்றாண்டில் வெளியான மற்றும் அதிக அளவில் வணிகம் செய்த திரைப்படங்கள் ஆகும். 21ம் நூற்றாண்டானது உலக அளவில் பெரும் மாற்றத்தை கொண்டு வந்து உலகமயமாக்கலின் விளைவால் மனிதர்களின் வாழ்க்கை முறை வெகுவாக மாறி உள்ளன. ஆனால், தமிழ் சினிமாக்கள் இன்னமும் திருமணத்தை தமிழரின் வாழ்வில் கட்டாயமான ஒரு நிகழ்வாக உருவாக்குவதில் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. திருமணத்திற்கு எதிரான கருத்தியலை சில படங்கள் முன்வைத்தாலும் அது பெரும்தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை. ஆனால் மேற்கண்ட சினிமாக்கள் மிகவும் பிரபலமான சினிமாக்கள் ஆகும்.

அதன் தாக்கம் தமிழரின் வாழ்வில் விரவி கிடக்கின்றன. காதலின் வெற்றி என்பது திருமணத்தில் தான் இருக்கிறது என்ற கருத்தியலை இந்த திரைப்படங்கள் மிக அழுத்தமாக முன்வைக்கின்றன. அதனால் பெரும்பாலான மனிதர்களின் வாழ்வியல் கேள்விக்குள்ளாகின்றன. திருமணம் எனும் நிகழ்வுக்கு பிறகான குடும்ப வன்முறைகள், திருமணம் வணிக சந்தையாக உருவானதன் பின்னணி பாதிப்புகள், ஆணவ படுகொலைகள், வரதட்சனை பிரச்சனைகள் என பல பிரச்சனைகள் இந்த சமூகம் திருமணம் எனும் நிகழ்வின் மூலம் உருவாக்கி வைத்திருக்கிறது.

உண்மையில் காதல் என்பது திருமணத்தில் முடிவதில்லை. அது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்றாக இருக்கிறது. காதலை திருமணத்தில் நிறுத்துவது தான் படத்தின் வெற்றியாக கருதுவது மாற வேண்டும். ஏனெனில் இதே காலக்கட்டத்தில் வெளிவந்து காதலையும் திருமணத்தையும் வேறு வேறாக காட்டிய 'காவலன்' மற்றும் '96' படங்கள் பெரும் வெற்றி பெற்றன என்பதை நாம் கவனிக்க வேண்டியதாக இருக்கிறது. எனவே, காதலை பல்வேறு கோணங்களில் அணுகும் சினிமாக்கள் வந்தால் தான் தமிழரின் வாழ்விலும் காதலை பல்வேறு கோணங்களில் அணுக முடியும். காதல் மற்றும் திருமணத்தின் பெயரால் நடக்கும் பெரும் வன்முறைகளை நாம் கட்டுக்குள் கொண்டு வர முடியும். ■

புரண்டோடும் நீரில்
உருண்டோடுகிறது சிறுவர்களின்
காகிதக் கப்பல்.

●

பல நாளாக ஓரிடத்தில்
இருந்து பயனில்லை
பழுதான மின்விளக்கு.

●

பணமில்லாது போனதனால்
விரிசல் அடைந்து போகிறது
பழங்கால உறவு.

**மு.ராம்குமார்**

கவிஞர். செல்லம் ரகு வின்...

# விடியலின் முகவரிகள்

## ஹைக்கூ கவிதை நூல் ஒரு திறனாய்வு.

**– அனுராஜ்**

ஹைக்கூ கவிதை இன்று உலகெங்கிலும் உள்ள கவிஞர்களால் விரும்பப்படக்கூடிய ஒரு கவிதை வடிவமாக உருவெடுத்துள்ளது எனில் அது மிகையன்று.. ஏனெனில் அக்கவிதையின் எளிமை..மற்றும் புதுமை..

ஹைக்கூ பெரியதொரு கானகத்தை தன்னுள் ஒளித்து வைத்திருக்கும் ஒரு சிறு விதை.

கற்பனைகளிலின்றி..உவமைகள் மற்றும் எந்தவித அலங்கார வார்த்தை ஜாலங்கள் இன்றி மிக எளிதான முறையில் வார்த்தைச் சிக்கனத்தோடு எழுதப்படும் இக் கவிதை வடிவமானது கவிஞனை ஈர்ப்பதோடு.. கூடவேவாசகனையும்பங்கெடுத்துக்கொள்ள அழைப்பு விடுக்கிறது.. கவிஞன் காட்சிப் படுத்தி நகரும் கவிதையில் காணக் கிடைக்கும் கோணங்களை தேடத் துவங்கி விடுகிறான் வாசகன்..ஆகையால்தான் பிரபல மேற்கத்திய ஹைக்கூ கவிஞரும் கட்டுரையாளருமான ஆர்.எச்.பிளித் (R.H.Blyth) ஹைக்கூவைப் பற்றிச் சொல்லும் போது அது “பாதி திறந்திருக்கும் கதவு” என்றார். உண்மை தான். பாதி திறந்திருக்கும் கதவின் வழியே நம் பார்வையைச் செலுத்தும் போது முதலில் ஒன்றும் புலப்படாது.. ஒரே இருளாகவே காட்சியளிக்கும்.. ஏனெனில் நாம் வெளியில் நின்று பார்க்கிறோம்..பாதி திறந்த கதவின் உள் நம் பார்வை முழுவதும் பதிவதில்லை.. சற்று நேரத்திற்குப் பின் மங்கலாக லேசாய் கொஞ்சம் புலப்படலாம்..அந்த அறைக்குள் உள்ள விசயங்கள், பொருள்கள், இன்னும் நம்முடைய பார்வை கூர்மைப்படும் பொழுது அங்குள்ள அனைத்தும் தெளிவாய் தெரியத் துவங்கும். இதே நிலை தான் ஹைக்கூ கவிதைகளும் வாசிக்க வாசிக்க நமக்கு புதுவித உணர்வலைகளை எழுப்பிக் கொண்டேயிருக்கும். ஒவ்வொரு முறையும் ஒவ்வொருக் கோணங்களை அவை விதைத்துச் செல்லும்.

கவிஞர். செல்லம் பாலா எனக்கு கடந்த மூன்றாண்டுகளாய் பழக்கமானவர்..அவரை தமிழ்நாட்டின் பொள்ளாச்சி நகரில் நடந்த இலக்கியசந்திப்பில்2016ஆம்ஆண்டுசந்தித்த போது.. அவர் புதுக்கவிதை மட்டுமே எழுதிக் கொண்டிருந்தவர்.. அன்று அந்நிகழ்வில் நான் ஹைக்கூ குறித்து ஒரு உரையாற்றி வந்தேன்..அவர் ஹைக்கூ எழுதுவாரா என்று அப்போது நான் அறியவில்லை.. இந்த குறுகிய காலத் தேடலில் இந்த விடியலின் முகவரிகள் எனும் ஹைக்கூ நூலை அழகாய் கொண்டு வந்திருக்கிறார்... இதற்கே ஒரு வாழ்த்து அவருக்கு.

விடியலின் முகவரிகள்.. எனும் இத்தொகுப்பில் ஹைக்கூ..சென்ரியு..மற்றும் லிமரைக்கூ எனும் ஏனைய ஹைக்கூ வகைமைக் கவிதைகளும் காணக் கிடைக்கின்றன.

சுவர் அசிங்கமானாலென்ன
தட்டுகளில் நீர் வையுங்கள்
வந்துபோகட்டும் சிட்டுக்குருவி.




சிற்றுயிர்களுக்கும் இரக்கம் காட்டும் ஹைக்கூவின் பண்பை விதைக்கிறது இக்கவிதை.

ஆழமாய்த் தோண்டத் தோண்ட
ஆறாய்ப் பொங்கி வழிந்தது
என்னுள் ஞானம்.

எனும் ஹைக்கூ ஜென் சிந்தனையில் உருவாகி உள்ளது.

பூவில் அமர்ந்த வண்டு
மெல்ல மெல்ல நகர்கிறது
வண்டை நோக்கி சிலந்தி.

இந்த காட்சிப் பதிவு சற்றே சிந்தனை களையும்.. பல கோணங்களையும்.. நம்முள் விதைத்து செல்வதையும் மறுப்பதற் கில்லை.

மேலேறி அமர்ந்ததும்
உலகம் சுற்றி வந்தது
சிறுவன் அமர்ந்த மண்குதிரை.

சிறுவர்களின் எண்ணவோட்டங்களை அழகாய் பிரதிபலித்த இக்கவிதையும் என்னைக் கவர்ந்த ஒன்று.

ஹைக்கூவை நிகழ்காலத்தில் வடிப்பது நல்லது..அதிலேயும்ஜென்சார்ந்தகவிதையை மட்டுமாவது நிகழ்காலத்தில் அமைக்கலாம்.. இறந்த காலம் ஏற்புடையதே.. ஆனால் அதையே அனைத்திற்கும் பயன்படுத்தினால் இனிமையாய் இராது.

இந்த சென்ரியுவை கவனியுங்கள்..

மனிதர்களை அணுகவே
அஞ்சுகிறார் இயேசு.
எல்லோர் கைகளிலும் சிலுவை.

மனிதரைத்தேடிச்செல்லும்இயேசுவையும் அஞ்சும்படியாக்கி விடுகிறது. மனிதர்களின் கைகளில் தூக்கிச் சுமக்கும் சிலுவை. இங்கு சிலுவை பாவத்திற்கான படிமமாக கொள்ளலாம்..அனைத்து மனிதர்களுமே

பாவங்களை தூக்கிச்சுமப்பதாக நினைக்க லாம். அந்த நிலையைக் கண்டு இயேசு அஞ்சுவதாக கொள்ளலாம்.

சந்தையில் மாடுவிற்ற பிறகும்
முரண்டு பிடித்தது
விட்டு வர இயலாத மனது.

வீட்டில் வளர்த்த ஒரு உயிரினத்தை நாம் விற்கும் சூழல் வந்தாலும்..மனம் அதை சுற்றியே சுழலும் என்பதை அழகாக சொல்லி நகரும் கவிதை.

இதை கவனியுங்கள்..

அறுவடை என்று வரும் போதே
உடன் நினைவுக்கு வருகிறது
அடகில் மனைவியின் வளையல்.

இது ஏழை விவசாயிகளின் வாழ்வின் அவலத்தை சொல்லி நகர்கிறது..

இக் கவிதையை கவிஞர்..

அறுவடை நாள்
நினைவுக்கு வருகிறது
மனைவியின் வளையல்.

என வார்த்தை சுருக்கமுடன் எழுதினால்.. இன்னும் சிறக்கும்.. ஏனெனில் ஹைக்கூவில் வார்த்தைச் சுருக்கமே பிரதானம்.. குறைவான வார்த்தைகளை நாம் உபயோகிக்கும் போது வார்த்தைகளின் மௌனம் கூடுவதோடு.. அதன் அடர்த்தியும் அதிகமாகும் என்பதை கவிஞர்கள் உணர வேண்டும்..ஹைக்கூவில் அனைத்தையும் சொல்லிக் கொண்டிருக்கத் தேவையில்லை..வாசகனை யூகிக்க வைத்து விட்டு கவிஞன் நகர்ந்து விட வேண்டும்.

இந்நூலில் ஆங்காங்கே லிமரைக்கூவும் தென்படுகிறது.. அதிலிருந்து இது..

அன்றே கொல்லும் சுனாமி
பேராசை கொண்ட யாரையும்
நின்று கொல்லும் பினாமி.

வாழ்வில் துன்பம் நிரந்தரம்
இலஞ்சம் சூதுவாதென மக்களுக்கு
இனிக்க வில்லை சுதந்திரம்.

பொதுவில்.. இவரது இந்நூல் படித்து எளிதில் கடக்க இயலாதவாறு நம்மைத் தேக்கி நிறுத்தவே செய்கிறது.. ஹைக்கூவை வார்த்தை சிக்கனமுடனும்.. உபன்யாச தொனியை தவிர்த்தும் இவர் ஹைக்கூவை அணுகத் துவங்கினார் எனில் எதிர்காலத்தில் பல நல்ல நூல்களை ஹைக்கூவில் தருவார் என உறுதியாய் சொல்லலாம். நண்பர் செல்லம் ரகு அவர்களின் "விடியலின் முகவரிகள்" சரியானத்தொரு விலாசத்தை அடைந்து விட்டதென்றே சொல்லலாம். வாழ்த்துகள்.

அகனி வெளியீடு
நூல் அளவு : 10.5 x 28 செ.மீ
பக்கங்கள் : 96
விலை : 120
தொடர்புகளுக்கு ...
அலைபேசி : +91 94437 75974

## ஹைக்கூ

■
தொடர் வண்டி
நின்றதும் மகிழ்ச்சி அடைகிறான்
வடை வியாபாரி

■
நந்தவன நிழலில்
அமைதியாக இருக்கும்
நாற்காலி

■
கோடை வெப்பம்
குறைவாக இருக்கிறது
வானில் கருமுகில்

■
காகிதக் கப்பல்
முட்டி மோதுகிறது
மழைத் துளி

**நிர்மலா சிவராசசிங்கம்**

# கவிச்சுடர் கா.ந.கல்யாணசுந்தரம் அவர்களுக்கு கம்போடியா - அங்கோர் தமிழ்ச்சங்கம் நடத்தும் சர்வதேச தமிழக் கவிஞர்கள் மாநாட்டில் உரையாற்ற அழைப்பு!

## புதிய தமிழ்க் கவிதை வடிவம் "தன்முனைக் கவிதைகள்" குறித்து உரையாற்றுகிறார்.

எதிர்வரும் செப்டெம்பர் 21 மற்றும் 22 தேதிகளில் கம்போடியா நாட்டில் அங்கோர் தமிழ்ச்சங்கம் உலகக் கவிஞர்கள் மகாநாடு நடத்துகிறது. இதில் உலகெங்கும் உள்ள தமிழ்க்கவிஞர்களுக்கு அழைப்பு விடுத்துள்ள அங்கோர் தமிழ்ச்சங்கம் சென்னையில் வசித்து வரும் கவிஞர் கா.ந.கல்யாணசுந்தரம் அவர்களுக்கும் அழைப்பு அனுப்பியுள்ளது. மரபு, புதுக்கவிதை, புதினம் மற்றும் ஹைக்கூ கவிதைகள் என எழுதிவரும் இவர் யூனியன் வங்கியில் மேலாளராக இருந்து ஓய்வு



பெற்றவர். கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேல் தமிழ்ச்சேவை செய்துவரும் இவருக்கு பல இலக்கிய அமைப்புகள் கவிச்சுடர், மதிப்புறு தமிழன் உள்பட பல்வேறு விருதுகள் கொடுத்து பாராட்டியுள்ளன.

இவரது புதிய கவிதை வடிவமான "தன்முனைக்கவிதைகள்" குறித்து விழாவில் உரையாற்ற அழைப்பு வந்துள்ளது.

அழைப்பினை ஏற்று கம்போடியா நாட்டுக்கு பயணம் மேற்கொள்கிறார் கவிஞர் கா.ந.கல்யாணசுந்தரம். தெலுங்கு நானிலு வடிவக்கவிதைகளை மூலமாகக் கொண்டு இவர் தமிழில் "தன்முனைக்கவிதைகள்" என பெயர் சூட்டி முகநூல் குழுமத்தை ஆரம்பித்து ஏறக்குறைய இன்றளவில் நூற்றுக்கணக்கான கவிஞர்கள் ஆர்வமுடன் எழுதிவருகின்றனர்.

கவிஞர் கா.ந.கல்யாணசுந்தரம் அவர்கள் ஏற்கனவே 31 கவிஞர்களின் 465 தன்முனைக்கவிதைகளை தொகுத்து "நான் நீ இந்த உலகம்" எனும் நூலினை கவிஞர் ஆரூர் தமிழ்நாடன் அவர்கள் கரங்களால் கடந்த ஆண்டு வெளியிட்டார். மேலும் தொடர்ந்து கவிஞர்கள் தன்முனைக்கவிதைகள் புத்தகங்களை வெளியிட்டு வருகின்றனர். தன்முனைக்கவிதைகள் கவியரங்கம் பல்வேறு தமிழ் இலக்கியக் குழுமங்கள் நடத்தி வருகின்றன.

செய்தித்தாள்கள், வார மாத இதழ்கள், இலக்கியச்சிற்றிதழ்கள், முகநூல், மின்னிதழ்கள் என ஆயிரக்கணக்கில் கவிஞர்களின் தன்முனைக் கவிதைகள் வெளியாகி வருகின்றன. தமிழில் குறுங் கவிதைகள் காணாமல் போன தருணத்தில் நான்கு வரிகளில் வரிக்கு மூன்று சொற்களென ஆழ்ந்த கருத்துகளோடு எழுதப்பட்டு வருகின்ற இந்தக் கவிதை வடிவத்தை வரவேற்று அங்கீகரித்துள்ள கம்போடியா - அங்கோர் தமிழ்ச்சங்க நிர்வாகிகளுக்கு கவிஞர் கா.ந.கல்யாணசுந்தரம் நன்றி தெரிவித்துக் கொள்வதோடு உலகக் கவிஞர்கள் மகாநாட்டில் 40 கவிஞர்களின் தன்முனைக் கவிதைத் தொகுப்பு "வானம் தொடும் வண்ணத்துப் பூச்சிகள்" என்ற நூலினை வெளியிடவும் ஏற்பாடுகள் செய்து வருகிறார் என்பது தமிழ் கவிதை உலகில் முத்திரைப் பதிக்கும் செய்தியாகும்.

கம்போடியா உலகத்தமிழ் கவிஞர்கள் மாநாட்டுக்கு இவருடன் கவிஞர்கள் சுமதிசங்கர், அன்புச்செல்வி சுப்புராஜு, தர்மாம்பாள் ரத்தினம், மற்றும் பல கவிஞர்கள் கலந்து கொள்கிறார்கள்.

தன்முனைக் கவிதைகள் எனும் புதிய கவிதைவடிவம் தொடங்கிய 20 மாதங்களில் பன்னாட்டு சிறப்பு பெறுவது பெருமைக்குரிய செய்தியாகும். ■

# தன்முனை
## கவிதைகள்

•

உடைந்த கண்ணாடியில்
ஆயிரம் பிம்பங்கள்
மனது உடைந்து
விரிசல்களாய் ஆனது.

•

மலர் மலரந்திட
மணம் தரும்
மனம் மலர்ந்திட
புன்னகை தரும்.

•

ஆடித் தள்ளுபடி
அமோக விற்பனை
பழையன களைதல்
புதியன புகுதல்.

•

இன்பம் வருவதும்
போவதும் தெரியாது
துன்பம் தொடர்ந்து
நின்று துளைக்கும்.

**- வா.சண்முகம்**
கும்பகோணம்

பல்சுவை
# தமிழ்நெஞ்சம்
www.tamilnenjam.com
செப்டம்பர் 2019



முறைப்பதேனோ முழுமதியே
குறையென்னடி கனிமொழியே
பிறைநிலவே கோபமேனோ
வதனத்தில் சந்தனத்தை
வைத்தே வதைக்கிறாயே
கேரளத்துப் பைங்கிளியே ..

திரும்பிப் பார்த்தலிலும்
விரும்பிப் பார்ப்பது
தெரிந்திடக் கூடாதென்றோ
இந்தவொரு இரும்புப்பார்வை ..

கார்மேக கருங்கூந்தல்
நீலவான நெடுங்கூந்தல்
மண்வாசனையை தோற்கடிக்கும்
மங்கையவள் மலர் கூந்தல்
பலாயிரம் கவிதைகளெழுதிடுமே
பால்மனம் வீசிடும்
அவள் பச்சிளம் தேகமுமே ..

சிறுநொடிப் பொழுதிலாவது
பிறந்திடுமா அவளிதழின்
இரக்கத்தினாலே இமைப்பொழுது
குறுஞ்சிரிப்புக் குழந்தையே
இமைக்காமல் பார்த்திருக்கிறேன்
இவ்வுலகைத் துறந்து
அவள் இதழ் உலகின் வாசலில்
வஞ்சியவளின் புன்னகைக்காக !! ...

**- கவிதைச் சிறுவன்**